நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம்
14.09.1901

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி - 110 | பகுதி - 11 | விலை ரூ. 10

திருவள்ளுவர் ஆண்டு - 2047 | நவம்பர் - 2016

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

நான்காம் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி**	தலைவர்
மருத்துவர் **ந.சேதுராமன்**	துணைத் தலைவர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	செயலாளர்
திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	உறுப்பினர்
முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**	உறுப்பினர்
பொறியாளர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S (ஓய்வு)	உறுப்பினர்
வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்**	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	உறுப்பினர்
திரு. **துரை கருணாநிதி**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்திசைக் கல்லூரி

கல்லூரிக்குழு

வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	தலைவர்
திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	செயலாளர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	உறுப்பினர்
பொறியாளர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S (ஓய்வு)	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **து.மாயராசன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **சு.சிவசாமி**	உறுப்பினர்
பொறியாளர் **லெ.சிவக்குமார்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி**	உறுப்பினர்
திரு. **ஜெ.பாலதண்டாயுதம்**	உறுப்பினர்
முனைவர். **க.பாலகிருஷ்ணன்** பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். **சு.விஜயன்** முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். **கி.வேணுகா** துணை முதல்வர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1.	இதழ் மணம்	4
2.	தனக்குவமை இல்லாத் தனிப்பெரு நூல்–(5) முதுமுனைவர் இரா.இளங்குமரனார்	6
3.	தமிழ் மூதறிஞர், செம்மல் பேரா.வ.சுப.மாணிக்கம் காப்பியப் பார்வை பேரா. முனைவர் இ.கி.இராமசாமி	10
4.	கம்பனில் போர் முனைவர் உ.கருப்பத்தேவன்	17
5.	திருசின்னம்பர்–திருஅம்பர் மாகாளம் திருவம்பர்–பெயர்க்காரணம் – ஓர் ஆய்வுச்சிந்தனை தருமையாதீனப்புலவர் தா.குருசாமிதேசிகர்	25
6.	அண்ணலைப் போற்றிய ஆலவாய் க்ஷேத்ராமிருதகவி பிரம்மஸ்ரீ ஏ.ஆர்.சுப்பையர் முனைவர் சு.முத்துஇலக்குமி	28
7.	திருமூலர் நெறி பேரறிஞர் சுப.அண்ணாமலை	34
8.	சங்கச் செய்திகள்	40

வலைதளம் : www.maduraitamilsangam.com
: www.senthamilcollege
மின்னஞ்சல் : maduraitamilsangam@yahoo.co.in
: principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 200	ரூ. 1,000
ஆயுள் கட்டணம்	ரூ. 2,000	ரூ. 10,000
புரவலர் கட்டணம்	ரூ. 10,000	ரூ. 20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ. 10	

இதழ் மணம்

தமிழறிஞர் இளங்குமரனார், தொல்காப்பியத்தை விளக்கும் திறம் எண்ணிப் படிக்கத்தக்கது. பிற ஆசிரியர் நெடிது எழுதிய செய்திகளை ஆசிரியர் சில சொற்களில் கற்பவர் நெஞ்சம் நெடிது சிந்திப்பதற்குரிய ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அறிவுக்கு, இன்பம் பயக்கும் நெறியில் கட்டுரையை படைத்திருப்பது உற்று நோக்கத்தக்கது. கிளிப்பிள்ளை போல, திறனாய்வு நெறி நில்லாது இயற்கை இயங்கியல் வழியறியா மொழி வழிஞரைப் பற்றிக் கொண்டு பின் வந்தோர் இலக்கணம் எழுதிய பிழையினால் நல்லதோர் சாலை குண்டும் குழியுமாகி முள்ளும் முடலும் பரப்புதற்கு இடனாயிற்று என்பது கல்வியாளர்க்கு அறிவியல் பார்வை வேண்டுமென்பதாயிற்று. கற்றல் என்பது விழிப்போடு உண்மை உணர்தற்குரிய வினா எழுப்புதலாகும். இதனைத் திறனறிந்து கற்றல் என்பர்; அதுவே கல்வி கற்றற்குரிய நெறியுமாகும். இதனைத் திருவள்ளுவர் எப்பொருள் எத்தன்மைத்தாயினும் என்றும் யார் யார் வாய்க்கேட்பினும் என்றும் அறிவுறுத்துவார். பெயரை விளக்கும் ஆசிரியர், கிடையில் ஆயர் குறிப்பிட்ட இடைவெளியில் பெயர்வை என்ற சொல்லைப் பயன்படுத்துவதை எடுத்துரைக்கின்றார். இது ஆசிரியருடைய "பார்வை" எவ்வளவு கூர்மையானது என்பதைக் காட்டும். அத்தகைய பார்வையைக் கற்றல், அறிவு நலத்தைக் கூர்மைப்படுத்தும்; ஆசிரியருடைய கட்டுரையைப் படிக்கும் தோறும் அவருடைய அறிவியல் நோக்கும் எந்தக் கட்டுக்கும் அடங்காது உள்ளதை உள்ளவாறு எடுத்துரைக்கும் மதி நுட்பமும் கற்கும் தோறும் வியப்பில் ஆழ்த்துகின்றது. ஒவ்வொரு செய்தியைச் சொல்லும் போதும் தவறுகளைச் சுட்டிப்பொருள் விளக்கும் திறம் உற்று நோக்கிக் கற்றற்குரிய அருமைப்பாடுடைத்து. மாணவர், ஆசிரியர் மற்றும் வாசகர்கள் ஆழ்ந்து கற்றுப் பயன் பெறுக. தொல்காப்பியத்தை முறை வழி நின்று கற்பிக்கும் இத்தகைய கட்டுரைகளை யாண்டும் காண்பது அறிதாகும்.

பேராசிரியர் சுப.அண்ணாமலை 1996ம் ஆண்டு செந்தமிழில் எழுதிய "திருமூலர் நெறி" என்னும் கட்டுரை இடம் பெறுகிறது. பேராசிரியர் சைவசமய இலக்கிய நலம் தோய்ந்த சான்றோர். அப்பெரியார் திருமந்திரம் குறித்து மதுரைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு நிகழ்த்தினார்; திருமந்திரத்தை உரை உள்ளீட்டுடன் மூன்று தொகுதிகளாக வெளியிட்டார். அண்மைக்காலத்தில் வெளிவந்த பதிப்புகளில் பேராசிரியர் சுப.அண்ணாமலையின் பதிப்பு நுட்பம் வாய்ந்ததாகும். அவர் கல்விநலத்தோடும் அனுபவ யோகப் பயிற்சியும் உடையவர். அவருடைய கட்டுரை அரிய செய்திகள் பலவற்றை உள்ளடக்கியதாகும். கற்றுப் பயன் பெறுக.

சைவப்புலவர் தா.குருசாமிதேசிகர் சைவத்தலங்கள் சிலவற்றின் பெயர்ச்சிறப்புக்களை எடுத்து விளக்கியுள்ளார். அவர் செந்தமிழ் நாட்டில் உள்ள திருத்தலங்கள் அனைத்தையும் நேரில் சென்று வழிபட்டதோடு அவற்றின் வரலாற்றையும் புராண இதிகாசச் செய்திகளையும் கற்றுத் தேர்ந்தவர்; கல்வியோடு கேள்விச் செல்வமும் உடைய அறிஞர். அவர் எண்பது அகவையைத் தாண்டியும் கற்றலும் கேட்டலும் கற்பித்தலும் எழுதுதலும் ஆகிய நெறியை வாழ்க்கையாக இடையறாது போற்றி வருவது கற்றல் என்பது வாழ்க்கையின் இறுதி வரைப் போற்ற வேண்டியதென்னும் திருக்குறளை நினைவுபடுத்துகிறது. புலவர். தா.குருசாமிதேசிகர் மகாவித்வான் தண்டபாணி தேசிகரைத் தம் இல்லத்தில் வைத்துப் பலகால் பேணிய பண்பாளர்; பெருமிதநோக்குடையவர். சைவ நெறிசார்ந்த குறிப்புக்களை அறிய விரும்புவோர் மதுரை வடக்குமாசிவீதியில் உள்ள தருமை ஆதினவளாகத்திற்குச் சென்று அவரைக் கண்டு பயன் பெறலாம்.

"கம்பனில் போர்" என்னும் தலைப்பில் பேராசிரியர் உ.கருப்பத்தேவன் பிற இலக்கியங்களில் போர் குறித்த செய்தியோடு ஒப்புநோக்கிக் கட்டுரை வரைந்துள்ளார். கம்பராமாயணப்போர் வர்ணனைகளை ஆசிரியர் சொல்லும் நயம் நயமாக உள்ளது.

பேராசிரியர் அ.முத்துஇலக்குமி அரசு கல்லூரிகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்; காந்திய இலக்கியங்களில் ஆழ்ந்த பயிற்சி உடையவர். சிறக்காதவற்றையும் சிறக்கச் செய்யும் திறமுடைய கலைவல்லவர்; கவிதையில் சாரமில்லாவிட்டாலும் சுவைபடப் படைக்கின்ற பக்குவம் அவருடைய கட்டுரையில் தெரிகிறது. பேராசிரியர் இ.கி.இராமசாமி, "வ.சுப.மாணிக்கம் காப்பியப்பார்வை" என்ற தலைப்பில் "பாட பேதம்" குறித்த ஆய்வைத் தெளிவுபடுத்துகிறார். உ.வே.சா.போன்ற அறிஞர்கள் தாம் பதிப்பித்த நூல்களில் காணப்பட்ட பாட பேதங்களை அடிக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளனர். அதனால் நூலைப் படிக்கின்றவர்கள் மூலநூல் ஆசிரியரின் எண்ணப்போக்கைச் சிந்திப்பதற்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கும்; அறிவு ஆராய்ச்சி மூலம் எந்தப் பாடம் சரியாக இருக்கும் என்பதை முடிவு செய்ய முடியும். ஆனால் பாட பேதங்களை நீக்கிப் பதிப்பிப்பதால் மூல நூல் ஆசிரியருடைய பாடம் எது என்பது தெரியாமல் போய்விடுகிறது.

அறிஞர் வ.சுப.மாணிக்கம் பாடபேதங்களை ஆய்ந்து உண்மை காணும் பார்வையை படிப்பவர்களுக்கு விளக்கும் அருமைப்பாட்டைப் பேராசிரியர் இ.கி.இராமசாமி அவர்கள் விளக்கியுள்ளார்கள்; கற்று இன்புறத்தக்கது.

தனக்குவமை இல்லாத் தனிப் பெருநூல்

5

முதுமுனைவர். **இரா.இளங்குமரனார்**

சொற்றொடராக இருந்தது எதுவோ, அதுவே சொல்லாகியது; சொல்லாகியது எதுவோ, அதுவே எழுத்தாகியது! –வியப்பு இல்லையா?

கூத்தாக இருந்தது எதுவோ, அதுவே இசையாகியது; இசையாக இருந்தது எதுவோ, அதுவே இயலாகியது!–இதுவும் வியப்பு இல்லையா?

இவ்வியப்புகளுக்கு மூலம் தொல்காப்பிய நூற்பா ஒன்று! ஒரோ ஓர் அடி நூற்பா!

"நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி!" என்பது **43.**

"ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ" இவை ஒவ்வொன்றும் எழுத்தாக இருந்தாலும் பொருளும் தருதலால் சொல்லேயாம்!

ஆ என்னும் எழுத்து வகர ஒற்றொடு(வ்) கூடின், *'வா'* என்றாகும். உயிர் எழுத்தும் மெய்யெழுத்தும் கூடியதால் *உயிர்மெய்* எழுத்து எனப்படுகிறது.

வாழைப்பழம் என்பதில் 'வா' எழுத்து!

'வா' என்றால், ஒருவனை அழைக்கும் அழைப்பாகிச் சொல் நிலை பெறும்! அதுவே (நீ)வா என்பதாயின் (தோன்றா எழுவாய்) சொற்றொடர் நிலைபெறும்.

வா என்பதே எழுத்து நிலை, சொல் நிலை, சொற்றொடர் நிலை என மூன்று நிலைகளையும் பெற்று விடுகின்றது! இனி, 'வா' என ஒருவனை அழைக்கும் போது – அது இயல் தமிழ்!

ஒளி படைத்த கண்ணினாய் 'வா வா வா' என்றால்,–அது இசைத்தமிழ்!

அதனை ஆடல் ஒப்பனை செய்து கொண்டு நட்டுவம் பிடித்துப் பாடினால் –அது கூத்துத்தமிழ் ஆகிவிடும்.

ஒரு நெட்டெழுத்தே சொல்லாய், சொற்றொடராய், இயலாய், இசையாய், கூத்தாய் வருமானால், அம்மொழியை அமைத்தவன் பெருமையும், அதனை அழியா நூலாக்கி அமைத்தவன் பெருமையும் நமக்கு ஒருங்கே விளங்கும்.

நெட்டெழுத்து ஏழும் பொருள் தரும் சொல்லாகும் என்ற தொல்காப்பியர், அதனை மேலும் தெளிவு செய்வாராய்,

"குற்றெழுந் தைந்தும் மொழிநிறை பிலவே"

என்றார்; அடுத்த நூற்பாவிலேயே(44)

ஏனெனில், ஐயம் ஏற்படக் கூடாது; ஐயம் உண்டானால் இந்நூற்பாவைக் கண்டாகிலும், குற்றெழுத்து ஒன்றனைச் சொல்லாக்கி விடக் கூடாது என்பதற்காக!

சொல் என்பதன் பொருள் அறிந்தால் எது சொல், எது சொல் இல்லை என்பது தெளிவாகிவிடும்.

சொல் என்பதன் பொருள் *நெல்.*

"*சொல்* அரும்சூல்பதம் பச்சைப்பாம்பின் கழுத்துப் போல் உள்ளது" என்கிறார் *சிந்தாமணியார்!*

சொல் > சொன் > சொன்றி = சோறு.

சொல் *தருவது* – நெல் *தருவது* = சோறு

"நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி" பெரும்பாண்.131

ஒ.நோ.

வெல் > வென் > வென்றி = வேறு (வெற்றி)

மணியாம் உள்ளீடு இருந்தாலேயே நெல் : இல்லாமையானால் பொய்க்கு > பொக்கு = உள்ளீடு இல்லாத பொய்யானது. அது, பதர், அரை அரிசி இருப்பது அரைக்காய்; அவ்வரிசி கருத்திருப்பது கருக்காய்; எதுவும் இல்லாதது பொக்கு. இதனைப் பதடி என்பார் வள்ளுவர்.

"பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி எனல்"

என்பது அது. *'பதடி வைகலார்'* என்னும் சங்கச் சான்றோர் பெயர் உள்ளதும் எண்ணத் தக்கது.

"எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே" (640)

என ஆணை மொழிசிறார் தொல்காப்பியர். அவ்வாணையைப் போற்றாதவர் காரணப் பெயர், இடுகுறிப் பெயர், காரண இடுகுறிப்பெயர் எனத் தமிழ் நெறிக்கு மாறாக, இயற்கை இயங்கியல் வழியறியா மொழி வழிஞரைப் பற்றிக் கொண்டு இலக்கணம் செய்தனர். அது முன்னவர் இட்ட நல்லதோர் சாலையைக் குண்டும் குழியும் ஆக்கி, முள்ளும் முடலும் பரப்பி நடையிட வைத்ததாயிற்று.

தொல்காப்பியர் சொற்கள்,

"சொல்லெனப் படுப பெயரே வினை என்று
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே"

"இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப"

என்று *பெயர், வினை, இடை, உரி* என நால்வகைச் சொற்களைக் காட்டுகிறார்.(643, 644)

முதற்கண் கூறியவாறு இந்நால்வகைச் சொற்களும் பொருள் குறித்தனவா என எண்ணல் மற்ற சொற்களைக் காண்பதற்கு வழியாக இருக்கும்.

பெயர்ச் சொல் :

பூ என்கிறோம். அதன் தோற்றம் வளர்ச்சி என்ன? *அரும்பு, முகை, மொக்கு, மலர், அலர்* எனப் பெயர்கிறது அல்லவா! அடிப்பொருள் மாறாமல் அதன் வளர் நிலைக்குத் தகப் பெயர்ந்து பெயர்ந்து வரலால் பெயர் ஆயிற்று. ஆயர் கிடை போடுவர் நிலத்தில் உரத்திற்காக! படுத்திருக்கும் ஆடுகளை இரண்டு மூன்று மணி நேர அளவில் எழுப்பி வேறு இடத்தில் படுக்க விடுவர். இதற்குப் *பெயர்வை* என்பது பெயர். இலக்கணர் வழக்கு மக்கள் வழக்காகவும் உள்ளது அல்லவா!

பிள்ளை, குழந்தை, குமரன், காளை, வாலியன், முதியன், பெருமுதியன்(அ)பெருமூதாளன் எனவும், *பிள்ளை, குழந்தை, குமரி, கன்னி, வாலியை(அ) வாலை, முதியள், பெருமுதியள்(அ)பெருமூதாட்டி* எனப் பெயரவில்லையா? அதனாலேயே *பெயர்* எனப்பட்டதாம்!

வினைச்சொல் :

*வினவுதல்*களுக்கு இடமாக அமைந்த சொல் வினைச்சொல்.

குழலி கற்றாள் என்பதில் *குழலி* பெயர். கற்றாள் என்பது வினைமுற்று (அ) பயனிலை.

கற்றாள் எவள்? திணை என்ன? பால் என்ன? எண் என்ன? இடம் என்ன? காலம் என்ன? வினை தெரிகிறதா, தெரியாமல் குறிப்பாக உள்ளதா? இத்தனை வினாக்களுக்கும் இடமாக இருப்பது 'கற்றாள்' என்பது தானே, அதனால்,

கற்றாள் என்பது, *உயர்திணை, பெண்பால், ஒருமை, படர்க்கை, இறந்தகாலத் தெரிநிலை வினைமுற்று* என இலக்கணம் கூற முடிந்தது. அதனால் தானே பயன்+நிலை=பயனிலை(பயன் நிலை பெற்ற இடம்) என்றும், இவை தெரிய வாராக்கால் பயன்+இலை=பயனிலை (பயன் இல்லா நிலை என்றும் பொருந்த அமைத்தனர் *பயனிலை* என்னும் சொல்லை.

இடைச்சொல் :

பெயர்ச்சொல்லும் ஆகாமல் வினைச் சொல்லும் ஆகாமல் பெயர் வினைச் சொற்களை இடைநின்று பொருள் விளக்கமாய் அமைந்த சொல் இடைச்சொல்.

கட்டட வேலை செய்பவர் கல்லையோ செங்கல்லையோ வைத்துச் சுவர் எழுப்புவர். ஒரு கல்லோடு ஒரு கல் ஒன்றிப் பெயராமலும் பிதுங்காமலும் சமனிலைப்பட்டும் இருக்கச் சாந்தோ கன்மாவோ

சந்துவாய், தளம் ஆயவற்றில் செலுத்தியும் அப்பியும் பணி செய்து நிரல் படுத்துவது போல்வது இது.

குறிஞ்சி மலைக்கும், மருதவயலுக்கும் *இடை நிற்கும் நிலம்* முல்லை. இடைக்காடு என்பது பெயர். முன்னதும் பின்னதும் நலமுற வளம் செய்யும் பகுதியாம் அது போல்வது இச்சொல்.

உரிச்சொல் :

நம் உடலின் மேல் பகுதி தோல், மேனி என்பதும் அது. நம் பிறப்புக்கு மூலப் பிறப்பாக அமைந்தது தோல்பை. அதன் முதன்மை கருதியே தொல் > தோல் என்றனர். அத்தோலுள்ளே தான் உடலின் உள்ளுறுப்புகள் ஒவ்வொன்றும் தோன்றி வளர்ந்து பிள்ளை எனப் பிறந்தோம்! அதனால் அத்தோல் பையே உடலுக்கு மூலம் என்பது தெளிவாகும். தோலுக்கு ஒரு பெயர் உரி என்பது.

பழங்களுக்குத் தோல் உண்டு. கடலைக்குத் தோல் உண்டு. ஆடு, மாடு, பறவை, மரம் முதலிய உயிரிகளுக்கெல்லாம் தோல் உண்டு. கடலையின் தோலை உரித்தல், பழத்தோலை உரித்தல் நாம் நாளும் காண்பது. புலவுக் கடையர் முதல் வேலையே தோல் உரித்தல் தான் என்பதை அறிவோம். தோலுக்கு 'உரி' என்பது பெயர்! அதில் இருந்து பிறந்தது விடுதலை எம் பிறப்பு *உரிமை* என்பது!

சொற்கள் தோன்றுதற்கு *மூலச் சொல்லாய் – அடிச்சொல்லாய் – வேர்ச் சொல்லாய் அமைந்தது உரிச்சொல்!*

செய்யுட்கு உரிய சொல் உரிச்சொல் என்பது, அதன் ஆழத்தையும் விரிவையும் குறைப்பதாம்.

உவப்பு–உவகை, *இசைப்பு*–இசை; *மழ*–மழலை, *குழ*–குழந்தை. இன்னவை செய்யுட்கு மட்டுமே உரியவையா?

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்பதைப் பார்த்த பார்வையில் அறிந்து விட முடியாதனவும் உண்டு. ஆழமாக எண்ணினால் பொருள் நுட்பம் நன்கு விளங்கும் என்பதால்,

"மொழிப்பொருள் காரணம் விழிப்பத் தோன்றா" என்றார் தொல்காப்பியர் (877).

–தொடர்வோம்

இரா.இளங்குமரன்

தமிழ் மூதறிஞர், செம்மல்
பேரா.வ.சுப.மாணிக்கம் - காப்பியப் பார்வை

தோற்றம் :- 17.4.1917, மறைவு:-25.4.1989)

பேரா.முனைவர் **இ.கி.இராமசாமி,**
மேனாள் தமிழ் துறைத் தலைவர்,
யாதவர் இருபாலர் கல்லூரி,
மதுரை-625 014.
அலைபேசி-98420 08954

1.1 அறிமுகம் :

தமிழின் உணர்வாகவும் வடிவாகவும் விளங்கிய தமிழ் மூதறிஞர் வ.சுப.மாணிக்கம் அவர்களின் நூற்றாண்டு (1917-2017 விழாவினை யொட்டி அவருடைய ஆராய்ச்சிச் சொற்பொழிவாகிய 'கம்பர்' நூலை மீண்டும் அறிமுகம் செய்து வைக்கும் நோக்கில் இந்தக் கட்டுரை எழுதப்படுகின்றது. இந்த முயற்சிக்குரிய முதன்மைச் சான்றுகள் வ.சுப.அவர்களின் 'காப்பியப் பார்வை', 'கம்பர்' ஆகிய இரண்டு ஆராய்ச்சி நூல்கள் ஆகும். கம்பர் தமிழக அரசின் பரிசு பெற்றது. இக்கட்டுரையின் அடிக்கருத்து, பாடபேதம்-நல்லபாடம்-பாடாந்தரம்-செம்பதிப்புப் பற்றியதாக அமையும். பாடபேதம் தீர்க்க முனைவோருக்கு நூற்பதிப்பில் பயிற்சியும் புலமையும் நினைவாற்றலும் பொறுமையும் தேவை. அதுவும் பதினொராயிரம் பாடல்களைக் கொண்ட கம்பராமாயணக் காப்பியத்தைப் பாடிய படைப்பாளியின் நினைவாற்றலைப் போன்ற நினைவாற்றல் பாடாந்தர ஆராய்ச்சியாளருக்கும் தேவை. தமிழியக்கச் சிந்தனையாளரும், படைப்பாளியும், இலக்கண இலக்கிய ஆராய்ச்சியாளரும், பயில்வதிலும் நவில்வதிலும் வல்லவரும் மேலாண்மைத் திறன்மிக்கவருமான வ.சுப.சிறந்த பாடாந்தர ஆராய்ச்சியாளரும் ஆவார் (Textual Critic).

1.2. கூர்ந்தமதி :

கூர்மையான மதிநுட்பம் பெற்றவர் வ.சுப.'எந்தச்சிலம்பு?' என்று வினாக்கேட்டுச் சிலப்பதிகாரக் கதைக்குக் காரணமானது கோப்பெருந்தேவியின் காணாமல் போன 'தீவினைச் சிலம்பு' என்று புதுமுடிவு கூறுவார் (வ.சுப.மாணிக்கம், எந்தச் சிலம்பு, பாரிநிலையம், சென்னை, 1972, பக்.21-22). "யான் கண்டனையர் என் இளையரும்" என்ற தொடருக்கு 'என்னுடன் பிறந்த தம்பியரும் என் எண்ணப்படி நடப்பர்' என்று பொருள் கூறுவார். அந்த வரிசைப்பாட்டில் மனைவி, மக்கள், ஆகியோரை அடுத்து உடன்பிறந்தார் தானே (இளையரும்) வரவேண்டும் என்பார். பிசிராந்தையார் தன் தலை நரைக்காமல் இருந்ததற்குத் தன் மனைவி, மக்கள் உடன்பிறந்தோர், பின்னர் வேந்தன், சான்றோர் காரணமாக இருந்தனர் என்றே பாடியுள்ளார் என்பது வ.சுப.வின் கருத்து.

காப்பியமாயினும் தன்னுணர்ச்சிப்பாவாயினும் புதுப்பார்வை செலுத்தும் வல்லாண்மை யுடையவர் வ.சுப.மாணிக்கம் என்னும் உண்மையை உரைக்கின்றது அவருடைய இலக்கிய விளக்கம். (வ.சுப.மாணிக்கம், இலக்கிய விளக்கம், மணிவாசகர் நூலகம், சென்னை, 1971, ப.22.)

"யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்;
யான்கண் டனையரென் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான்; காக்கும்; அதன்தலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே" (புறம்: 191)

வயது முதிர்ந்தும் நரைதோன்றவில்லையே என்பது கேள்வி. அதற்கு நான்கு கருத்துக்களை விடையாகச் சொல்கின்றார் பிசிராந்தையார். தன் குடும்பநலம், தன்பொதுக்குடும்பநலம், தன் ஆட்சிநலம், தன் ஊர் நலம் எல்லாம் யாதும் குறைவில்லை. தொடர்புள்ள இடமெல்லாம் நலம் பயப்பனவாக இருக்கையில் நரைக்கு இடமில்லை.

பிசிரார் மொழிந்த நான்கு நலன்களுள் தன் குடும்பநலம், தன் பொதுக்குடும்ப நலம் என்ற இரண்டனையும் அகச்சூழ்நிலை எனவும் ஏனைய இரண்டனையும் பொதுச் சூழ்நிலை எனவும் பகுத்துக் கொள்ளலாம். 'இளையர்' என்பதற்கு 'ஏவலாளர்' என்று இதுகாறும் பொருள் சொல்லப்பட்டு வருகின்றது. மனைவி, மக்கள், வேந்தன், ஊர்ச்சான்றோர் என்போர் இயல்பான தொடர்பினர். விலக்கமுடியாத உறவுநிலையினர், இந் நிலையினரோடு எண்ணத்தக்கவர் அல்லர் ஏவலாளர், விலகற்கும் விலக்கற்கும் உரியவர். ஆதலின் 'என்இளையர்' என்பவர் உடன்பிறப்பினரே ஆவர் என்று வ.சுப.விளக்கம் உரைக்கின்றார் (இலக்கிய விளக்கம், மணிவாசகர் நூலகம், சென்னை, 1971 (ஏழாம்பதிப்பு) ப.22.

மேலும், தம் கருத்துக்கு அரணாகத் திருத்தக்கதேவர் சொல்லிய நல்ல தம்பியின் அருமையையும் சுட்டிச் செல்கின்றார். உடன்பிறந்தோர் எனில் அண்ணன்மார் தம்பிமார் இரட்டையர் என்ற நிலைகளும் உண்டு. எனவே தம்பிமார் என்ற பொருளில் இளையர் என்ற சொல் ஆளப்பட்டுள்ளது என்பது அவருடைய கருதுகோள்.

"திண்பொருள் எய்தல் ஆகும்;
தெவ்வரைச் செகுத்தல் ஆகும்;
நண்பொடு பெண்டிர் மக்கள்
யாவையும் நண்ணல் ஆகும்

ஒண்பொரு ளாவ தையா
உடன்பிறப் பாக்க லாகா;
எம்பியை ஈங்குப் பெற்றேன்
என்னெனக்கு அரியது என்றான்" (சிந்தா. 176)

1.3 பதிப்பு வரலாறு :

1952ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கம்பராமாயணச் செம்பதிப்பு ஒன்றை வெளியிடும் திட்டத்தைத் தொடங்கியது. அப்போதைய இணைவேந்தர் அரசர் முத்தையாச் செட்டியார் அவர்கள் அந்தத் திட்டத்திற்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்க முன்வந்தார். பதிப்புக்குழுவின் தலைவர் பொறுப்பை மூதறிஞர் ரா.பி.சேதுப்பிள்ளை ஏற்றுக் கொண்டார். கம்பராமாயண ஏடுகளையும் அச்சிடப்பெற்ற நூல்களையும் தேடித் தொகுக்கும் பணி தொடங்கியது. மதுரைத் தமிழ்ச்சங்கம், அரசாங்கக் கையெழுத்து நூற்சாலை, தஞ்சை சரசுவதி மகால், அடையாறு சாமிநாதய்யர் நூல்நிலையம், காரைக்குடி கம்பன் கழகம் போன்ற அமைப்புகள் இராமாயணச் சுவடிகளை மனமுவந்து வழங்கின. தொகுப்புப் பணி ஒருவாறு முடிந்ததும், ஏடுதோறும் சீர் சீராகப் பாடபேதங்களைப் படித்துக் குறிப்பெடுக்க, ஒழுங்குபடுத்த, உரையெழுத, அச்சுப் பார்க்க ஆய்வாளர்கள் அமர்த்தப்பட்டனர். பாடச்செம்மை கணிக்கவும் உரைப்போக்கை ஒப்பிடவும் இராமாயணம் பதிப்புக்குழு ஒன்று அமைக்கப்பெற்றது. அரசர் முத்தையாச் செட்டியாரைப் போலவே இந்திய அரசின் நிதி நல்கைக்குழுவும், தமிழக அரசும், திருப்பனந்தாள் காசி மடத்துக் கட்டளையும் பெருநிதி வழங்கின. இராமாயணம் 16 தொகுதிகளாக வெளியிடப் பெற்றது. அந்தப் பணி 18 ஆண்டுகள் நடைபெற்றது. சுவையற்ற பாடபேதங்கள் நீக்கப்பட்டன. செம்மையான பாடங்கள் உரைவிளக்கத்துடன் சேர்க்கப்பட்டன. பின்னர் உலா வரத் தொடங்கின.

1.4 பதிப்பின் சிறப்பு :

1. இராமாயணச் செய்யுட்கள் – 10534
2. மிகைப் பாடல்கள் – 1309
3. பாடவேறுபாடுகள் – 318489
4. பாடவேறுபாடு இல்லாத பாடல்கள் – 11

மிகைப்பாடல்களில் காணப்பட்ட பாடபேதங்களைத் திருத்திச் செம்மைப்படுத்தினர் என்பது அந்தப் பதிப்பின் சிறப்பின் சிறப்பாகும்.

1.4.1 சான்று :

துணிந்த பாடத்தை – முடிவு செய்யப்பட்ட நல்ல பாடத்தைப் பாடவரிசையில் முதற்கண் வைத்துள்ளனர். சரியான பாடத்தைத் தேர்ந்து

தெளிந்து தந்துள்ள கிட்கிந்தை காண்ட 118ஆம் பாடலின் இறுதியடியில் காணப்பட்ட பாடவேறுபாடுகளைச் சான்றாகக் காண்போம்.

“கறங்கு கால்புகா கதிரவன் ஒளிபுகா மறலி
மறம்புகாதினி வானவர் புகாரென்கை அம்பே
திறம்பு காலத்துள் யாவையும் சிதையினும் சிதையா
அறம்பு காதிந்த அணிமதிட் கிடக்கைநின் றகத்தின்”

இந்தப் பாட்டின் இறுதிஅடியில் வரும் அறும்புகாதிந்த, அணிமதிள், கிடக்கைநின்று, அகத்தின் என்பன செம்பாடங்கள்.

பேதங்கள் :	அறம்புகாமையால்	அழியுமிந்
	அறம்புகாதெனில்	அழியுமிப்
	அறம்புகாதிதேல்	அழிந்தில
	அகன்மதில்	
	அகநகர்	
	அம்மதில்	
	கிடங்கை	
	அகத்தில்	
	அகத்து	

இவ்வாறே ஒரே பாட்டில் பத்திற்கு மேற்பட்ட பாடவேறுபாடுகளைக் கண்டறிந்து செம்பாடத்தை நிறுவினர் என மொழிகின்றார். அவர்களுடைய முயற்சியும் உழைப்பும் எவ்வளவு அருமைப்பாடுடையன என்பதை எண்ணிப்பார்க்கவே இடர்தோன்றுகின்றது. இன்று கணினி அச்சுச் செய்வோர் சந்திப்பிழையும் எழுத்துப்பிழையும் சொற்பிழையும் செய்வதைத் திருத்த அரும்பாடுபடுகின்ற நமக்கு, பாடபேத ஆராய்ச்சி எவ்வளவு பெரிய வேலையென்று தெரிய வாய்ப்பு இல்லை. தவமாய்த் தவங்கிடந்து பாடபேதம் நீக்கிக் கம்பராமாயணப் பதிப்பைக் கொண்டு வந்துள்ள அறிஞர் குழுவோடு தம்மையும் சேர்த்துக் கொண்டார் வ.சுப.

1.4.2 கம்பர் :

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளையின் கொடையால் ‘காப்பியப் பார்வை’, ‘காப்பியக்களம்’, ‘காப்பியநேர்மை’ என்ற தலைப்புகளில் முறையே மூன்று நாள்கள் மூதறிஞர் வ.சுப.நிகழ்த்திய ஆராய்ச்சிச் சொற்பொழிவின் திரட்சியாகக் ‘கம்பர்’ என்ற நூலை மணிவாசகர் பதிப்பகம் வெளியிட்டுள்ளது (1990).

“காப்பிய ஆய்வுகளில் புதுநெறி புகுத்தியவர் மூதறிஞர் டாக்டர் வ.சுப.மாணிக்கனார். ‘கம்பர்’ என்னும் மிகச் சிறந்த ஆய்வு நூலில் காப்பியம் கற்கும் நெறியையும் துய்க்கும் நெறியையும் புதுவகையில் விளக்கியுள்ளார்.

காப்பியக் களன்களின் இயல்புகளையும் கட்டமைப்புக்களையும் அகநலன்கள் புறநலன்களையும், தனிச் சிறப்புக்களையும் புதிய அணுகுமுறையில் விளக்கியுள்ளார். கம்பர்–நூல் காப்பிய ஆய்வில் தாய்மையும் தலைமையும் உடையது. முற்றிலும் இம்மண்ணுக்குரிய மரபுகளை அடிப்படையாகக் கொண்டது. ஆசிரியரின் அறிவாற்றலின் தனிக்கொடையாகும். முழுப்பார்வைக் கொள்கையினைப் படைத்தளித்தது இவரது தமிழ்த் திறனாய்வின் கொடையாகும். இந்நூல் திறனாய்வு நெறியில் புதியதடம் பதித்துள்ளது'' என்று பதிப்புச் செம்மல் ச.மெய்யப்பனார் வ.சுப.அவர்களின் கம்பரைப் பாராட்டுகின்றார். இந்த அணிந்துரை வாசகம் 'காப்பியப்பார்வை' என்ற நூலில் காப்பியக் கல்வியில் புதுநெறி (ப.ப) என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ளது. படைப்பாளியின் ஒரு நூலைப் பற்றிப் பேசப்புகுந்த பதிப்பாசிரியர், படைப்பாளியின் மற்றோர் நூலில் ஆழ்ந்துவிட்ட மனநிலையை இது காட்டுகின்றது.

1.4.3 ஏவினானா? இயம்பினானா?

காப்பியம் பயிலுவோர் துண்டுப்பார்வை செலுத்தாமல் முழுப்பார்வை செலுத்தினால்தான் செம்மையான பாடத்தை வரையறை செய்யமுடியும் என்கிறார் வ.சுப.அதற்கு அவர் எடுத்துக் கொண்ட செய்யுள் பாலகாண்டத்தில் வரும்.

"ஆழிசூழ் உலக மெல்லாம்
பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித்
தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கான நண்ணிப்
புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண் டாண்டின் வாவென்
றியம்பினன் அரசன் என்றாள்"

என்பதாகும். பரதன் நாடாளவேண்டும் இராமன் சடைக்கோலம்–தவக்கோலம் பூண்டு காடேக வேண்டும். இது அரசனின் ஆணை என்று கைகேயி இராமனுக்குச் சொல்லும் இடம் இது. இயம்பினன் அரசன் என்றாள் என்பது இப்பாடலில் உள்ள பாடம். ஏவினன் அரசன் என்றாள் எனவும் ஒரு பாடம் உள்ளது. இயம்பினன் என்பது சரியா? ஏவினன் என்பது சரியா? தீர்மானிப்பது எப்படி? எத்தனை சுவடிகளில் இயம்பினன் என்பது வந்துள்ளது, ஏவினன் என்பது வந்துள்ளது என்று இலக்கியவுலகிற்குக் குடியரசு முறையைப் பின்பற்றலாமா? என்று முதலில் வினா எழுப்புகிறார் வ.சுப. இப்பாடலில் தயரதன், கைகேயி, இராமன் என்ற மூன்று பாத்திரங்கள் உள்ளன. இவற்றின் தனித்தன்மைகள் வேறுவேறானவை. இன்ன பாத்திரம் இன்ன சொல்லைச் சொல்லும், அப்படிச் சொல்லுவதற்கு உரிமை அதற்கு உண்டு என்று அறிவார் கம்பர். தயரதன் இராமனைப்

பார்த்து 'நீ முடிசூடிக்கொண்டு நல்லாட்சி செய்க! எனக்கு நீ செய்ய வேண்டிய கடமை இது' என்று வேண்டினான். அதனை ஏற்றுக் கொண்ட இராமன்,

"யாது கொற்றவன் ஏவியது
அதுசெயல் அன்றோ
நீதி யெற்கு எனநினைந்து அப்
பணிதலை நின்றான்"

எனமொழிந்து நின்றான். தயரதன் வேண்டுகோளை அரசனின் ஆணையாக மதித்தான் இராமன். ஏனென்றால் அரசவையில் அரசனால் சொல்லப்பட்டது அரசமுறைமைப்படி ஆணையாகும். அந்த அரச கட்டளை மீண்டும் கவிக்கூற்றாகப் பலவிடங்களில் வருகின்றது.

"என்ற பின்னரும் மன்னன் ஏவியது
அன்றெனாமை மகனே யுனக்கறன்",

"ஏவிய குரிசில்பின் யாவர் ஏகிலார்";

"தெருளுடை மனத்து மன்னன்
ஏவலின் திறம்ப அஞ்சி".

இத்தகைய இடங்களிலெல்லாம் மன்னனொடு 'ஏவல்' என்ற வினைச்சொல் கட்டளைப் பொருளில் வருவதை அறியலாம். எனவே இயம்பினன் என்பதைவிட ஏவினன் அரசன் என்ற பாடமே காப்பிய மரபு ஆகும், கருத்துச் சிறப்புமாகும் என்கின்றார் வ.சுப.

1.4.4. பிறநூற்சான்று :

சிலப்பதிகாரத்தில் இராமகாதையைக் குறிப்பிடுமிடத்தில் இளங்கோவடிகள்,

"தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வற் பயந்தோன் என்பது
நீயறிந் திலையோ நெடுமொழி யன்றோ"

என்பார். 'தாதை ஏவலின்–தந்தை கட்டளையிட்டதால்' என்று தானே அங்குப் பொருள். ஏவினான் என்பதே சரியான பாடம் என்பதற்கு இவ்வாறு பிறநூற்சான்று தருகின்றார் வ.சுப.

"மன்னவன் பணியன்று ஆகில் நும்பணி மறுப்பனோ நான்" என்னுமிடத்து 'அரசன் கட்டளையிடாவிட்டாலும் நீ சொன்ன கட்டளையை நான் மறுக்கமாட்டேன்' என்பதுதானே பொருள். தயரதன் கட்டளையிடாவிட்டாலும் கைகேயி கட்டளையிட்டாலும் அதன்படி நடப்பான் இராமன் என்பது இதனால் விளங்கும்.

பாட்டனார் வீட்டிற்குச் சென்றிருந்த பரதனும் சத்துருக்கனனும் திரும்பி வந்தனர். அயோத்தியில் நடந்தவற்றையெல்லாம் தெளிந்தனர். பரதன், தங்களைப் பெற்ற தாயும் தந்தையும் தவறு செய்துவிட்டனர் என்றும் இராமன் முடிசூட்டிக் கொள்ள வேண்டும் என்றும் அன்புக் கட்டளையிட்டான். வசிட்டனும் அதுபோல இராமனுக்குக் கட்டளையிட்டான். அதற்கு இராமன், 'முன்னே பணித்த தாய்தந்தையரின் ஏவலைத் தலைமேற்கொண்டு நிறைவேற்றுவதாக வந்தேன். நீங்களோ பின்வாங்கும் படி கட்டளை இடுகிறீர்கள். செய்யத்தக்கன சொல்லுங்கள்' என்று கேட்டான். அவ்விடத்தும் 'ஏவிய' என்ற சொல்லாட்சிதான் இடம்பெறுகின்றது. இங்ஙனம் முழுப்பார்வை பார்க்கும்போது தான் எது நற்பாடம் என்று தீர்மானம் செய்யமுடியும் என்கின்றார் வ.சுப.

1.4.5. இதயமாஞ்சிறை :

சூர்ப்பனகையின் பெருஞ்சூழ்ச்சியாலும் சொல்வன்மையாலும் தங்கை என்ற பாசத்திறனாலும் சீதையை நயந்து தன் *இதயமாம் சிறையில்* வைத்தான் இராவணன். எங்கோ எப்போதோ கையாண்ட இச்சொற்றொடரை மிகுந்த நினைவாற்றலுடன் வைத்திருந்த கம்பர் உயுத்த காண்டத்தில் சானகியை மனச்சிறையில் கரந்த காதல் என்று மீண்டும் கையாளுகின்றனார். 'இலங்கைநாதன் இதயமாஞ்சிறையில் வைத்தான்' என்று ஆரணிய காண்டத்து மாரீசன் வதைப் படலத்தில் சீதையை இராவணன் தன் மனச்சிறையில் அடக்கியதாகக் கூறிய கம்பர், 6800 பாடல்கள் தாண்டி உயுத்த காண்டத்தில் இராவணன் வதைப் படலத்தில் மனச்சிறையில் கரந்த காதல் உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து தடவியதோ ஒருவன் வாளி" என்று சொல்லி அவள் விடுதலை பெற்றதைச் சுட்டுகின்றான்.

இடைப்பட்ட 6800 பாடல்களை ஒரு நோக்குக் கொண்டு எண்ணப்பின்னலாக ஆயும்போது கம்பர் பெருமானின் அளவிலாச் சிந்தைத் திறம், ஞாபகத் திறம், அயராத்திறம், நிறைதிறம் எல்லாம் புலப்படும் என்கின்றார் வ.சுப.

1.5 நிறைவுரை :

வ.சுப. இவ்வாறு சொல்லாட்சியும் பொருள் நயமும் கெடாத கம்பரின் படைப்பாற்றலை வெளிப்படுத்துகின்றார். பாட பேத ஆய்வில் 'ஏவினன்' என்பதையும், பொருள் மாறுபடாத வகையில் 'இதயமாம் சிறையில் வைத்தான்' என்ற சொற்றொடரையும் ஆய்ந்து தீர்மானித்துள்ள மூதறிஞர் வ.சுப.அவர்களை வாழ்த்தி வணங்குவோம். அவருடைய ஆழ்ந்தகன்ற பார்வை ஆராய்ச்சியாளர்க்கு என்றென்றும் முன்மாதிரியாகத் திகழும் பெருமையுடையது.

குறிப்பு :

கைகேயி என்ற இலக்கிய வழக்கையும் கைகேசி என்ற உலக வழக்கையும் தமது மொழிநடையில் பயன்படுத்தியுள்ளார். உயுத்த காண்டம் என்பதும் வ.சுப.அவர்களின் தமிழாக்கம் ஆகும்.

கம்பனில் போர்

முனைவர் **உ.கருப்பத்தேவன்**
உதவிப் பேராசிரியர்
ஒப்பிலக்கியத் துறை, தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை–625 021.
அலைபேசி : 94435 71776

முன்னுரை :

கூடியவரை போர் நிகழாமல் இருக்க வேண்டும். அதற்குப் பொறுப்பில் உள்ள வேந்தனோ நாட்டுத் தலைவனோ பகையை வளர்த்துக் கொள்ளாமல் இருத்தல் வேண்டும். பகை தவிர்க்கும் பண்பு இருத்தல் அவசியம். பகை என்னும் மாறுபாடே போரினைத் தூண்டுவது என்பதால் 'இகல்' என்னும் மாறுபாட்டை ஒழித்தல் வேண்டும். சமூகம், அறிவியல் என்னும் அமைப்புக்களை வளர விடாமல் கெடுப்பது போர். உலகம் தோன்றிய நாள் முதலாக மனிதன் போராடி, இந்த மண்ணைச் செங்குருதியால் நனைத்திருக்கின்றான். உலக நாடுகளில் நடைபெற்ற போர்களில் சில இனங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டன. ஆயினும் நம் நாட்டில் அரசர்கள் நடத்திய போர்முறைகளில் நெறிமுறைகள், அறங்கள் பின்பற்றப் பெற்றன. இராமகாதையில் பல போர்கள் நிகழ்கின்றன. இதில் நிகழும் அனைத்துப் போர்களும் அறநெறிப் போர்களே. போருக்கு முன்பு தூது அனுப்புவது தமிழ்ப் பண்பாட்டு மரபு; தூதில் உடன்பாடு ஏற்படாவிட்டால்தான் போர் நிகழும். அப்போரும் குறித்த காலத்தில் குறித்த களத்தில்தான் நடைபெறும். இரவில் போர் நிகழாது. இதனால் இந்தப் போர்களினால் பொதுமக்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் இல்லை; துன்பம் ஏற்படுவதற்கு வாய்ப்பும் இல்லை.

கம்பனில் அனுமன் தூது :

தமிழ் இலக்கியங்களில் வரும் தூது குறித்த செய்திகள் அறநெறிக் களஞ்சியங்கள் ஆகும். கம்பனின் இராமகாதையில் இலங்கைப் பேரரசன் இராவணனுக்கு அனுப்பப்பெற்ற முதல் தூதுவன் அனுமன். காப்பியக் கதைப்படி பார்க்கும்போது அனுமன் சீதையைத் தேடிச் சென்றவனே; இலங்கையில் நடந்த நிகழ்வுகளே அவனைத் தூதுவன் ஆக்கியது. இராவணன் அரசவையில் இராவணன் முன்னர் அனுமன் இராம தூதுவனாகப் பேசுகின்றான். உலக வரலாற்றில் தீமை ஒருபோதும் நன்மையையும் வெற்றியையும் பெற்றதில்லை; வெற்றி பெறவும் இயலாது.

பொருளையும் காமத்தையும் அனுமன் 'இருள்' என்று குறிப்பிடுகின்றான். வாழ்க்கையின் தெளிவு ஈகையும் அருளுமே. அனுமன் இறுதியாக இராவணனைப் பின்வருமாறு எச்சரிக்கை செய்கின்றான்.

"ஆதலால் தான் அரும்பெறல் செல்வமும்
ஓது பல்கிளையும் உயிரும் பெற,
'சீதையைத் தருக' என்றுஎனச் செப்பினான்
சோதியான் மகன் நிற்கு எனச் சொல்லினான்"

(கம்பரா.பா.எண்.5910)

மனிதன் இயல்புகள் :

மனிதன், மனிதனுமல்லன்; விலங்குமல்லன்; தெய்வமும் அல்லன். மனிதன் விலங்குத் தன்மையிலிருந்து விலகி கடவுள் தன்மையைப் பெறவேண்டிய படைப்பு; இந்த உண்மையை அறிந்தும் உணர்ந்தும் தெளிந்தும் வாழ்பவர்கள் உலகில் மிகச்சிலரே; எந்த நிலையிலும் மனிதனிடம் மிருக, மனித, தெய்வக் குணங்கள் உடன் சேர்ந்தே கலையாகவே இருக்கும். சூழ்நிலையின் இயல்புகளுக்கேற்ப அவற்றுள் ஒன்று வெளிப்படும்; பிறிதொன்று குறையும். மனிதப் பண்புகளை நுணுக்கமாகக் கண்டுகணித்த சான்றோர் மனிதனைத் தேவாங்கு, பாம்பு, பன்றி, நாய், வேட்டை நாய், கிளிப்பிள்ளை, கழுதை, வான்கோழி, தூண், கழுகு, ஆந்தை எனக் கூறியுள்ளனர். ஆந்தைக்கு வெளிச்சம் பிடிக்காது. மனிதனுக்கு உண்மை பிடிக்காது; உழைக்காமல் பிறர் உழைப்பில் வாழ்பவன் கழுகு. கல்வியறிவு இல்லாதவன் விலங்கன்று; விலங்குக்குள்ள ஐந்தறிவு இந்த மனிதனுக்குள் வேலை செய்யாது; அவன் உணர்ச்சியற்ற தூண் ஆவான்; வீண் ஆடம்பரம் செய்பவன் வான்கோழி ஆவான். அநீதியைத் தட்டிக் கேட்காதவன் கழுதை; அறிவை வளர்த்துக் கொள்ளாமல் படித்த சாத்திரங்களைப் படித்துப் படித்து ஒப்புவிப்பவன் கிளிப்பிள்ளை; அடிக்கடி கோபம் கொள்பவன் வேட்டைநாய்; சுயநிர்ணயம் இல்லாமல் பிறரை நச்சி வாழ்பவன் நாய். அற்ப சுகத்தில் நாட்டமுள்ளவன் பன்றி; நல்லவன் எனப் பெயர் பெற்றுத் தீமை செய்பவன் பாம்பு; ஊக்கமில்லாமல் இருப்பவன் தேவாங்கு. ஆயினும் சான்றோர்கள் மனித இயல்பில் ஆக்கிரமிப்புக் குணம் போர்க்குணம் இருப்பதைக் குறிப்பிடவில்லை.

போர்க்குரிய காரணங்கள் :

மனிதன் அழுக்காறு, அவா, வெகுளியால் ஆட்டிப்படைக்கப்படும் பலவீனமுடையவன்; அவன் பிறருடன் ஒத்து இணக்கமாகச் செயல்பட மாட்டான்; ஆயினும் மற்றவர்கள்–இந்த உலகமே தன்னுடன் ஒத்துச் செல்ல வேண்டுமென விரும்புவான்; ஆயினும் ஒவ்வொரு மனிதனுமே உலகத்திற்குச் சமமானவன் என்பதை அவன் மறந்து விடுகின்றான்.

இதனாலேயே இந்த உலகம் கெட்ட போரிடும் உலகமாகிவிடுகின்றது. மனிதனுக்கு வெறிபிடித்துவிட்டால் அவன் பேய், பிசாசு ஆகின்றான். மனிதகுல முன்னேற்றத்திற்குத் தேவையான கருவிகளைக் கொண்டே மனித குலத்திற்குத் தீமைகள் செய்கின்றான். மனித குலத்தை நாசம் செய்கின்றான். அணு, அழிவுப்பொருளன்று; ஆனால் அணுவினால் மக்கள் அச்சத்தில் நடுங்கிக் கொண்டிருக்கின்றனர். மனிதன் அரசியல், அரசு என்னும் அமைப்புக்களில் ஏகாதிபத்தியப் போட்டிகளில் ஈடுபடும்போது விலங்காக மாறிவிடுகின்றான். போர்கள் மனிதன் உள்ளத்தில் தோன்றி மக்கள் நலனைப் பாதிக்கின்றன. போர்வெறி மனிதனுடன் பிறந்தது. இந்தப் போர்வெறியை மாற்ற மனிதகுலமே போராட வேண்டியுள்ளது.

வன்முறையும் ஆக்கிரமிப்பும் கண்டனத்திற்குரியவை.போரைவிடக் கொடுமையானது, போரைப்பற்றி மக்கள் கொள்ளும் அச்சமே. அமைதிக் காலத்திலும் சில நாடுகளை எதிரி நாடுகளாகக் கருதி, எப்போதும் எதிர் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன; சிறுசிறு தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கின்றன. இதனைப் 'பனிப்போர்' (Cold War) என்பர்.

போர் இலக்கியங்கள் :

வால்மீகி, வியாசர்,கிரேக்கக் கவிஞர் ஹோமர், ஆங்கிலக் கவிஞர் ஜான்மில்டன் ஆகியோர் போர்களை மையமாக வைத்துக் காப்பியங்களைப் படைத்துள்ளனர். இந்தப் போர்கள் கற்பனை அல்ல; உண்மையாக நடந்தவைகளே; கம்பராமாயணத்தையும் மகாபாரதத்தையும் போல ஹோமரின் 'இலியாட்'டில் வரும் 'டிராய்' போரும் போரே எனினும், அது அறப்போர் அன்று; ஸ்பார்ட்டா நாடு சூது நடத்தி வெற்றியைப் பெறுகின்றது. சர்வதேச அரங்கில் மராத்தான் ஓட்டம் 42கி.மீ. ஓடவேண்டும். இந்த மராத்தான் ஒரு பந்தய வீரனாவான். பெர்ஷிய நாட்டுக்கும் கிரேக்க நாட்டுக்கும் நடந்த போரில் கிரேக்கர்கள் பெற்ற வெற்றியைச் சொல்ல ஓடி வந்தவன் மராத்தான். அதனால் அது மராத்தான் ஓட்டம் எனப் பெயர் பெற்றது.

தமிழிலக்கியத்தில் போரை மையமாகக் கொண்டு மூன்று பெருங்காப்பியங்கள் தோன்றியுள்ளன. அவை இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம் என்பனவாகும். இவற்றுள் இராமாயணமும் மகாபாரதமும் நாடு தழுவிய இதிகாசங்கள் ஆகும். கந்தபுராணமும் கம்பராமாயணமும் தமிழகத்திற்கே உரிய தனித்தன்மை கொண்ட காப்பியப் படைப்புக்கள் ஆகும்.

கம்பராமாயணத்தில் வரும் இராம-இராவணப் போர் பெண் அடிப்படையில் நடந்த போராகும். பாரதப்போர் ஆட்சி-ஆதிக்க

அடிப்படையில் நிகழ்ந்த போராகும். இராமாயணப்போரில் இராமனால் இராவணன் கொல்லப்படுகின்றான். பாரதப்போரில் துரியோதனன் உள்ளிட்ட கௌரவர்கள் அழிக்கப்படுகின்றனர். இந்திய நாகரிகத்திலும் உயர்ந்தது தமிழ் நாகரிகம்; தமிழர் நாகரிகத்தில் அழிவும் இல்லை; அழிக்கப்படுவதும் இல்லை. இதனால் கச்சியப்பரின் கந்தபுராணத்தில் சூரபன்மன் அழிக்கப்படவில்லை. திருத்தப்படுகின்றான்; ஏற்கப்படுகின்றான்.

கம்பராமாயணத்தில் சீதையைத் தேடி இலங்கைக்குச் சென்ற அனுமன், எதிர்பாராத வகையில் தூதுவனாக மாறுகின்றான். இராமனை அனுமன் முதன்முதலாகச் சந்தித்தபோது, அனுமனின் சொல்லாற்றலை வியக்கும் இராமன் பின்வருமாறு கூறுகின்றான்.

"இல்லாத உலகத்து எங்கும்
இங்கு இவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக்
கடலுமே என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற்று அன்றே!
யார்கொல் இச்சொல்லின் செல்வன்?
வில்ஆர் தோள் இளைய வீர!
விரிஞ்சனோ? விடைவ லானோ?"

(கம்பரா.பா.எண்.3768)

இத்தகைய சொல்லாற்றல்மிக்க அனுமன், இராவணனிடம் சென்ற தூது இலக்கியச் சிறப்புடையது. தூதுவர்கள் அடக்கமும் அமைதியும் உடையவர்களாகவும், அதே சமயத்தில் துணிவும் உறுதியும் கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும். எதிரிகள் எரிச்சலைத் தூண்டும்படி பேசினாலும், செயல்பட்டாலும் தூதுசென்றவர்கள் எரிச்சலடையக் கூடாது. தூதின் முடிவு காரிய சாதகமாகவும், போரைத் தவிர்ப்பதாக அமையுமாறும் பார்த்துக் கொள்ளல் வேண்டும். தவிர்க்க இயலாத வகையில் உடன்பாடும் அமைதியும் ஏற்படாவிடின் இறுதியில் போரை ஏற்கவும் தூதுவன் தயங்கக் கூடாது.

அனுமன் சீதையைத் தேடி இலங்கைக்குச் சென்றவன்தான். ஆயினும் அனுமனுக்கும் அரக்கர்களுக்கும் போர் நிகழ்ந்துவிடுகின்றது. அனுமன் தன்னந்தனியனாகப் போர்க்களத்தில் நின்று அரக்க வீரர்களைக் கொன்று குவிக்கின்றான். இது தூதுவனுக்குரிய கடமையன்று; இலங்கை மக்களும் அனுமனைத் தூதுவன் என

நினைக்கவில்லை. சீதையை மீட்பதும், இராவணனையும் மற்ற அரக்கர்களையும் கொடுந்தொழிலிருந்து விடுவிப்பது என்னும் இரண்டுமே அனுமனின் குறிக்கோளாகும். இராவணன், அனுமன் கூறிய நீதியையும் அறத்தையும் ஏற்கவில்லை. அனுமன், இராவணனிடம் தன்னைத் தூதுவன் என்றே அறிமுகப்படுத்திக் கொள்கிறான். தன் தலைவனாகிய இராமன் மண்ணில் பிறந்து நடமாடும் பரம்பொருள் என்கின்றான். அறநெறிசார்ந்த அனுமனின் முயற்சி இராவணனிடம் பலன் அளிக்கவில்லை. அவன் தன் வாலில் வைக்கப்பட்ட தீயைக் கொண்டு இலங்கையின் அழகுகளை அழித்துவிட்டு இராமனிடம் திரும்புகின்றான். இராமனிடம் மீண்ட அவன் இராமன் முன்னிலையில் சீதை இருந்த திசையை நோக்கித் தொழுகின்றான்.

அனுமனின் இச்செயலை,

"எய்தினன் அனுமனும், எய்தி, ஏந்தல்தன்
மொய்கழல் தொழுகிலன்; முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன், கையினன்,
வையகம் தழீஇ நெடிதுஇறைஞ்சி வாழ்த்தினான்"

(கம்பரா.பா.எண்.6028)

எனப் பேசுகின்றான் கம்பன். சீதையின் கற்பு நிலையை உறுதிப்படுத்துவதற்கு இராமனிடம் 'கண்டெனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்' என்கின்றான்.

"தீண்டிலன் என்னும் வாய்மை
திசைமுகன் செய்த முட்டை
கீண்டிலது; அனந்தன் உச்சி
கிழிந்திலது; எழுந்து வேலை
மீண்டில; சுடர்கள் யாவும்
விழுந்தில; வேதம் செய்கை
மாண்டிலது; என்னும் தன்மை
வாய்மையால், உணர்தி மன்னோ!"

(கம்பரா.பா.எண்.6039)

என்றும் அனுமன் கூறுகின்றான். இராமனும் அனுமனின் நடத்தையாலும் வாக்கினாலும் 'சீதையை அனுமன் கண்டதும் உண்டு, சீதையின் கற்பும் நன்று' என்று உணர்ந்து தெளிகின்றான்.

இடபன் :

இடபன், சுக்கிரீவன் சேனையில் பணியாற்றிய ஒரு வானர வீரன். கார்காலம் முடிந்ததும், சுக்கிரீவன் தான் உறுதி கூறியபடி வராது கண்ட இலக்குவன் வெகுண்டான். தெளிந்த சுக்கிரீவன் வானர சேனையை அணி வகுத்து இராம இலக்குவர்க்குக் காட்டினான். அவ்வணி வகுப்பில் இடபன் தொள்ளாயிரம் கோடிப்பேருடன் பீடு நடை போட்டான்.

"ஏழும் ஏழும் என்று உரைக்கின்ற உலகங்கள் எவையும்
தாழும் காலத்தும், தாழ்வு இலாத் தடவரைக் குலங்கள்
சூழும் தோற்றத்த, வலிகொள் தொள்ளாயிரம் கோடிப்
பாழிவெம் புயத்து அரியொடும், இடபன் படர்ந்தான்" (4424)

இடபன் இலங்கைப் போரில் வீரத்துடன் போரிட்ட வானர வீரன். அதிகாயன் இலக்குவனோடு பொருத எழுந்த நாளில், நீலன் போர்மத்தனைக் கொன்றான். தருமத்தைத் தள்ளி வாழ்ந்த கன்மத்தினனான வயமத்தன் வெகுண்டு எழுந்தான். இடபன் எதிர்ந்து வந்து அவ்வயமத்தனோடு பொருதான். அறிவார்ந்த கேள்வி ஒன்றை வயமத்தன் முன் வைத்தான். அக்கேள்வியால், இராவணன் இழைத்த குற்றத்தைச் சுட்டிக்காட்டி அத்தகைய "இழிந்த தலைவன் கீழ் பணி புரி வயமத்தனே" என்று விளித்தான். 'உன் தலைவன் காமநோயாளன். அந்நோய்க்கு நீயாவது மருந்தாகச் சென்று இராவணனிடம் சுட்டிக் காட்டியிருக்க வேண்டும். எனவே நோய்க்கு மருந்து செய்யாத ஒருவனே' (7957) எனக் குத்திக் காட்டி விளித்தான். இவ்வாறு கேட்டபடி இடபன் வயமத்தனின் தேரைத் தூக்கிக் கடலில் வீசினான். வயமத்தன் எழுந்தான். இடபன் அவனை இறுக்கிக் கட்ட அவன் உயிர் விட்டு விண் சென்றான். (7961).

கம்பனில் போர் :

கம்பனின் இராமகதையில் இரண்டு சிறிய போர்களும், ஒரு பெரும் போரும் நடைபெறுகின்றன. முதற்போர் தாடகையுடன் இராமன் நிகழ்த்திய போராகும். கம்பராமாயணத்தில் பாலகாண்டத்தில் ஏழாவதாகத் தாடகை வதைப்படலம் அமைந்துள்ளது. விசுவாமித்திர முனிவர் இராம–இலக்குவருடன் சரயுநதியைக் கடந்து, அங்கநாட்டுச் சோலையில் தங்குகின்றார். அங்கே முற்காலத்தில் சிவபெருமான் தவம் செய்யும்போது, மன்மதன் அவர்மீது மலரம்புகளை எய்தான். சிவன் சினமுற்று மன்மதனை எரித்தான். அவன் உரு (வடிவம்) மறைந்தான். அதனால் அவ்விடம் 'காமன் ஆசிரமம்' என்னும் பெயரினைப் பெற்றது. அதுவே அங்கநாடு ஆகும்.

விசுவாமித்திரரும் இராம–இலக்குவனும் கொடிய வெப்பம் மிகுந்த பாலை நிலவழியில் செல்கின்றனர். இராமனும் இலக்குவனும் கொடிய

பாலையில் வெப்பத்தைத் தாங்குவதற்காக *பாலை, அதிபாலை* என்னும் இருமந்திரங்களைக் கூறுகின்றார் விசுவாமித்திரர். அதனால் வெப்பம் தணிந்து குளிர்ந்த சூழல் ஏற்படுகின்றது. அப்போது விசுவாமித்திரர் 'தாடகை' என்னும் அரக்கியின் வரலாற்றை அவர்களிடம் கூறுகின்றார்.

சுகேது என்பான் தவம் செய்து ஒரு மகளைப் பெற்றான். அவளைச் *சுந்தன்* என்பானுக்கு மணம் செய்து கொடுத்தான். அவர்களுக்கு மாரீசன், சுபாகு என்னும் இரண்டு மகன்கள் பிறந்தனர். சுந்தன் அகத்தியரின் சினத்திற்கு ஆட்பட்டுச் சாம்பலானான். அவன் மனைவி யாகிய தாடகையும் இரு மகன்களும் அகத்தியரிடம் வந்து சாபம் பெற்று அரக்கராயினர். விசுவாமித்திரர் வேள்வி செய்யுமிடத்தில் தாடகை அச்சம் தரும் வடிவங்கொண்டு பயமுறுத்துகின்றாள். தாடகை பெண் என்பதால் இராமன் கணைதொடுக்கவில்லை. விசுவாமித்திரர் இராமனிடம் இவள் 'பெண் அல்லள்; கொல்' என்கின்றார். இராமன் அம்பெய்து அவளை வீழ்த்துகின்றான். அரக்கியாகிய தாடகை அழிகின்றாள். அதனைக் கண்ட தேவர்கள் இராமனை வாழ்த்துகின்றனர்.

'தாடகை' உருவத்தால் பெண்; ஆனால் உண்மையில்,

"........அரும் பாவம் ஈண்டி, ஓர்
பெண் உருக்கொண்டெனத் திரியும் பெற்றியாள்"

(கம்பரா.பா.எண்.360)

என்று இராமனிடம் விசுவாமித்திரர் கூறுகின்றார். தாடகை, மருத நிலத்தை அழித்துப் பாலை நிலமாக்கிவிட்டாள். அவளிடம் *உலோயகுணம்* மேலோங்கிக் காணப்பட்டது. ஆயினும் இராமன், அவள் பெண்ணாக இருப்பதால் அவளிடம் போரிடத் தயங்கினான். மீண்டும் மீண்டும் விசுவாமித்திரர், தாடகை தீமையின் வடிவம்; அவள் பெண் வடிவம் கொண்டவளே தவிர, பெண் அல்லள் எனக் கூறித் தாடகையைக் கொல்லுமாறு இராமனைத் தூண்டுகின்றார். இராமன் தாடகைமீது விட்ட அம்புகள், தாடகையின் நெஞ்சில் பாய்ந்து அப்புறமாகச் சுழன்று சென்றன. அவை அற்பர்களுக்கு அறிஞர்கள் கூறிய அறிவுரை போல இருந்தன. இதனைக் கம்பன்,

"சொல் ஒக்கும் கடிய வேகச் சுடுசரம், கரிய செம்மல்
அல் ஒக்கும் நிறத்தினாள் மேல் விடுதலும், வயிரக் குன்றக்
கல்ஒக்கும் நெஞ்சில் தங்காது, அப்புறம் சுழன்று, கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள் எனப் போயிற்று அன்றே!"

(கம்பரா.பா.எண்.388)

வாலி—சுக்கிரீவன் போர் :

கிட்கிந்தையில் வலிமை மிக்கவன் வாலி. அவன் சுக்கிரீவனை விரட்டி விரட்டி அடிக்கின்றான். வாலிக்கும் சுக்கிரீவனுக்கும் நடைபெறும் போரில் சுக்கிரீவனுக்கு ஆதரவாக இராமன் தலையிடுகின்றான். மறைந்திருந்து எய்த இராமனின் அம்புக்கு வாலி இரையாகின்றான்.

"ஆழிசூழ் உலகமெல்லாம் பரதனேயாழ நீ போய்
தாழிருஞ் சடைகள்தாங்கித் தாங்கரும்தவம் மேற்கொண்டு
பூழிவெங் கானம்நண்ணி புண்ணியத் துறைகளாடி
ஏழிரண்டு ஆண்டின்வாவென்று இயம்பினான் அரசனென்றாள்"

(கம்பரா.பா.எண்.1601)

என்ற கைகேயியின் ஒரு சொல்லுக்குக் கட்டுப்பட்டு மகிழ்ச்சியுடன், தந்தை சொல்ல வேண்டுமென்ற அவசியம் இல்லை, உன்னுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு நடப்பேன் என்றுகூறி,

"பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ!
என்இனி உறுதி அப்பால்" (கம்பரா.பா.எண்.1604)

எனக்கூறிக் கைகேயியிடம் விடைபெற்றுக் கொண்டு இராமன் காட்டிற்குச் செல்கின்றான். அடுதலும் பொருதலும் அழித்தலுமே அரசியல் என உலக வரலாறுகள் கூறுகின்றன. கம்பனின் இராமகாதை மட்டுமே இத்தகைய உயரிய பண்பாட்டைக் கூறுகின்றது.

'பேரரசு தனக்கு இல்லை' என்ற நிலையில் எவ்வாறு இராமன் கவலைப்படவில்லையோ, அவ்வாறே பேரரசு தனக்கே என்ற நிலையிலும் மகிழவுமில்லை. சுக்கிரீவன், வாலியிடம் தக்க காரணத்தைக் கூறி, அரசாட்சி உட்பட அனைத்தும் உனக்கே எனக்கூறிய பின்பும், வாலி சினமும் ஆத்திரமும் கொண்டு சுக்கிரீவனை அடித்து விரட்டுகின்றான்; சுக்கிரீவன் மனைவி உருமையையும் அபகரித்துக் கொள்கின்றான். வாலி ஐயப்பாடு கொண்டவனாகவும், ஆத்திரக்காரனாகவும் விளங்குகின்றான். தன்னை எவரும் வெற்றி கொள்ளக்கூடாது என்பதற்காகத் தவம் செய்து, தன்னுடன் போரிடுபவர்களின் பாதிப்பலம் தன்னையே சேருதல் வேண்டும் என்ற வரத்தையும் பெறுகின்றான் வாலி. ஆதலால்தான் வாலியிடம் இராமன் நேரடியாகப் பேசவும் இல்லை; போரிடவும் இல்லை. பேச்சுக்களின் எல்லைகளைக் கடந்தநிலையில் வாலியின் செயற்பாடுகள் அமைந்துவிட்டன. அத்துடன் வாலி இராமபக்தன் ஆவான்.

தொடர்ச்சி
அடுத்த இதழில்

திரு இன்னம்பர்-திரு அம்பர் மாகாளம் திருவம்பர்-
பெயர்க்காரணம் - ஓர் ஆய்வுச்சிந்தனை

தருமையாதீனப்புலவர்
தா.குருசாமிதேசிகர்
அலைபேசி : 96002 94012

புறச்சமய நூலான குண்டலகேசியில் பௌத்தஅறம் பேசப்படுகிறது. அதே சமயம், பிற சமண, சைவ நெறிகள் இடித்துரைக்கப்படுகின்றன. கி.மு.6ஆம் நூற்றாண்டில் கங்கை நதிக்கரையில் ஆரியர்கள் தங்கினர். அப்போது அப்பகுதியில் திராவிடர்களும், பழங்குடியினரும் வாழ்ந்தனர். அப்பகுதியில் வாழ்ந்த ஆரியர்களுக்கும், சமண பவுத்தர்களுக்கும் பூசல் ஏற்பட்டது. சில நூற்றாண்டுகளில் ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் கலப்பு நிகழ்ந்தது. பின்னர் கி.மு.3ஆம் நூற்றாண்டில், ஆரியவர்த்தம் என்று அழைக்கப்பட்ட கங்கை நதிக் கரையிலிருந்து, சமண, பவுத்த சமயங்களும், வைதீக சமயமும், தென்னகத்திற்குக் குறிப்பாகத் தமிழகத்திற்குள் புகுந்தன என்பர் மயிலை சீனி.வேங்கடசாமியார்.

தமிழகத்தில் பிறநெறிகள் புகுதல் :

கி.மு.3ஆம் நூற்றாண்டிலேயே தமிழகத்தில் சமண, பௌத்த சமயங்கள் வந்து சேர்ந்தன என்றாலும் சமயப்பூசல் அற்ற ஒற்றுமை யுணர்வோடு, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உணர்வோடு நல்லிணக்கத்தோடு வாழ்ந்தனர். கி.பி.3 ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஐம்பெருங்காப்பியங்களில்தான் சமயப் பூசல்கள் கால் கொண்டன. சிலப்பதிகாரத்தில் கவுந்தியடிகள் கூற்றாக வைதீகநெறி பழித்துரையாகக் காணப்படுகிறது.

குண்டலகேசி :

குண்டலகேசியில் 19 பாடல்கள் மட்டும் கிடைத்துள்ளன. அவற்றின் சில பாடல்கள் பவுத்தமல்லாத பிற சமயத்தாரைப் பழித்துரைக்கின்றன. சமயப் பூசலுக்குக் காரணமாக, ஊன்மறுத்தல், உண்ணல், கொலை, கொலை மறுத்தல், தவம், துறவு போன்றவை அமைகின்றன. பொய்த்தவம் பூணுவதாக, சைவ, வைணவ, வேத, சமணர்களைக் குண்டலகேசி நாலாவது பாடல் குறிப்பிடுகின்றது. காவி ஆடையை உடுத்திக் கொள்வதோ, ஆடை இன்றி இருப்பதோ சாம்பல் முதலிய பொடிகளைப் பூசிக்கொள்வதோ, பனிக்காலத்திலும் நீராடுவதோ, தீயில் நிற்பதோ,

பிச்சை ஏற்று உண்டு வாழ்வதோ, சடைமுடிதரித்து அலைவதோ உண்மையான தவஒழுக்கம் ஆகிவிடாது என்பதை,

"போர்த்தலுடை நீக்குதல் பொடித்துகண் மெய்பூசல்
கூர்த்த பசி யாற்றுதல் குளித்தழலுள் நிற்றல்
சார்த்தரீடு பிச்சையர் சடைத்தலை யராதல்
வார்த்தையிவை செய்தவ மடிந்தொழுக என்றான்".

ஆய்வு :

இப்பாடலைக் கொண்டு 'தமிழக வரலாற்றில் சமயப்பூசல்' என்ற ஆய்வேட்டில் திரு.வீரா. அழகிரிசாமி தரும் ஆய்வு நன்றியுடன் வழி மொழியப்படுகிறது. 'போர்த்தல் உடை நீக்கல்' என்பது சமணர்களைக் குறிக்கும். சமணர்களில், சுவேதாம்பரர், திகம்பரர்–என்ற இரு பிரிவு உண்டு. இவர்களில் 'சுவேதாம்பரர்' என்ற பிரிவினர் வெண்ணிற ஆடை அணிவர். இவர்களின் ஆலயங்களில் உள்ள, தீர்த்தங்கரர் திருவுருவங்களுக்கும் வெண்ணிற ஆடை அணிவர்.

*'சுவேதாம்பரம்' என்பதற்கு வெண்ணிறஆடை என்பது பொருள். 'திகம்பர' சமணத்துறவிகள் ஆடை அணிய மாட்டார்கள். கௌபீனமும் உடுத்த மாட்டார்கள். திகம்பரர் என்றால் திசைகளை ஆடையாக உடுத்தவர் என்பது பொருள். திக்+அம்பரம்=திகம்பரம். அதாவது ஆடையின்றி இருப்பவர். இச்சமணப் பிரிவினர் இந்தியா முழுவதும் பரவி இருந்தாலும், தமிழகத்தில் திகம்பரர்களே பரவி இருந்தனர் என்று அறிய முடிகின்றது என்று ஆய்வாளர் கருதுவர்.

இன்னம்பர் :

இச்சமணர்கள் பவுத்தர்கள் தமிழ்நாடு முழுவதும் பரவி இருந்தாலும், சோழநாட்டில் இருதிறத்தாரும் பல்கி இருந்தனர். நாகையில் பௌத்த ஆலயம் இருந்ததை அனைவரும் அறிவர். திருப்புகலூர்–தனித் தன்மையோடு விளங்கும் ஒரு சிவசந்நிதி 'வர்த்தமானீச்சுரம்' என சமணப்பள்ளிப் பெயரைத் தாங்கியுள்ளது. திருப்புகலூர்ப் பக்கத்தில் 'புத்தகரம்' என்ற ஊர் உள்ளது. அது பௌத்தர் வாழிடமாகும். அதே போல் அவ்வூர்ப் பக்கத்தில் 'சன்னா நல்லூர்' என்ற ஊர் உள்ளது. அது சமணநல்லூர் என்றிருந்து மருவியது என்பர் ஆய்வாளர். இன்னம்பர்,

---

*சுவேதாரண்யேசுவரர் – திருவெண்காடு எனக் கூறுவதும் சமண்சார்பு முன்பு இருத்தலைக் குறிக்கும்.

மயிலாடுதுறைக்குப் பக்கத்தில் உள்ள பாடல் பெற்ற தலம் ஆகும். இனிமை+அம்பர் என்று பிரிந்து இனிய புலித்தோலாடை அணிந்தவர் சிவன் என்ற பொருளில் 'அம்பர்'* என்ற சொல் இங்கு அடைமொழி இருமடியாகு பெயராகச் சிவனைக் குறித்து, புலித்தோல் ஆடை அணிந்தவராக, சடாமுடி உடையவராக, திருஞானசம்பந்தர் பதிகம் பதிவு செய்கிறது. இனன்+நம்பு+ஊர்–இன்னம்பூர் என்றாயிற்று என்று பனசைப்பதிப்பில் பதிவாக இருந்தாலும், அம்பர் என்ற சொல் திகம்பரர் வாழ்ந்த சமண்பள்ளியையே குறிக்கும்.

அம்பர்–அம்பர் மாகாளம்:

அம்பர்+மாகாளம்: உடை தவிர்ந்த காபாலிகர் வாழிடம்–சுவாமி பிட்சாடனராக வந்த வரலாற்று எதிர்வினையாக இச்சொல் முழுவதும் சமணப்பள்ளியாக இருந்து, பின்பு மாற்றம் பெற்ற இத்தலம் சமணர் வாழ்ந்த–பள்ளி இருந்த இடம் என்பது, சம்பந்தரால் பதிவு செய்யப்படுகிறது. இத்தலத்தில் சுவாமி,

'துணியாருடையினான் துதைபொற்கழல் நாளும்
பணியாதவர் மேற் பறையா பாவமே'

என்று சுவாமி துண்டித்த ஆடை அணிந்தவன் என்று, சமணருக்கு எதிராக அருளியிருப்பதை அறியலாம். இன்னம்பர் என்பது போல சம்பந்தர் 'தாய்' அவதாரம் செய்த நனிபள்ளியும் சமணர் வாழிடமாகும். பள்ளி என்பது, சமணப் பள்ளியையும் 'நனி' என்ற உரிச்சொல் அடைமொழி சிவனது அருள் மிகுந்த இடம் என்று, பின்பு சைவ மறுமலர்ச்சிக் காலத்தில் மாறியதை, திருஞானசம்பந்தர் பாலை நெய்தலாகப் பாடியதாகக் குறிப்பு மொழியினால் கூறப்படுவதையும், சம்பந்தர் பதிகத்தாலும் தெரியவரும். அம்பன்–அம்பாசுரன் என்ற இரண்டு அசுரனால் பெயர் பெற்றது என்ற பதிவு வரலாற்றுக்கு முரணாக வரைந்த கூற்றாகும். 'மாகாளம்' காபாலிகர் சம்பந்தருடைய உடை தவிர்ந்த பிட்சாடனர் இயைபுடையது என்ற ஆய்வில் 'தாம்பரம்' என்பதும் சுவேதாம்பர சமணர் வாழிடத்தின் எச்சமாக இப்பெயர் அமைந்திருக்கலாம் என்பது அடியேனின் கருத்து.

---

* 'அம்பரம் அடைந்து' என்ற சம்பந்தர் தேவாரம் வெட்டவெளி என்ற பொருளைக் குறிக்கும்

அண்ணலைப் போற்றிய ஆலவாய் க்ஷேத்ராமிருதகவி பிரம்மஸ்ரீ ஏ.ஆர்.சுப்பையர்

முனைவர் சு.முத்துஇலக்குமி
முதல்வர், காந்திய சிந்தனைக் கல்லூரி,
மதுரை–625 020.
அலைபேசி : 75981 64495

0.0. அண்ணல் காந்தியடிகளின் சத்தியசோதனை நூலின் (பக்.605) இறுதிப் பத்தி, "தற்போதைக்கேயாயினும் வாசகரிடம் நான் விடை பெற்றுக் கொள்கிறேன். மனம், வாக்கு, காரியங்களில் அகிம்சை விரதத்தை எனக்கு அருளுமாறு சத்தியமேயான கடவுளைப் பிரார்த்திக்கிறேன். அந்தப் பிரார்த்தனையில் என்னுடன் கலந்து கொள்ளுமாறு வாசகரைக் கேட்டுக் கொண்டு விடை பெற்றுக் கொள்கிறேன்" (சத்தியசோதனை, நவஜீவன் வெளியீடு) என்பதாகும். 1920–ல் அன்று அண்ணல் இத்தகு வேண்டுதலைக் கேட்டுக் கொண்டுள்ளார். அவர் வாக்குச் சத்திய வாக்கு. எனவே தான் காலந்தோறும் உலகளாவிய திறத்தில் படைக்கப்படுகின்ற மானுட மகத்துவ உயிர்கள் அவரைப் போற்றியும், பின்பற்றியும் அவருடன் கலந்தும் வாழ்வியல் வளத்தைப் பெற்றனர், பெறுகின்றனர், பெறுவர் என்று எடுத்துரைக்கலாம்.

1.0. ஒரு யுகத்திற்கான கால அளவைத் தன்னுள்ளே கொண்டு 'காந்தியுகம்' என்றொரு யுகத்தைப் படைப்பதற்கான அத் 'தனித்துவ' மிகப் பிரம்மாண்ட ஆளுமை வீச்சினைக் கொண்ட அம்மகானின் காலத்தை, அவர் வாழ்ந்த காலம் என்றால் 1869–1948 என்பது தான். ஆனால் அவர் காலத்திற்கு முன்பு வாழ்ந்தவர்கள், அவர் காலத்தில் வாழ்ந்த சம காலத்தவர்கள், அவருக்குப் பின்பு வாழ்ந்தவர்கள் என்று பகுத்துக்காணும் வகையில் காலத்தைத் தன் வாணாள் கணக்கில் பதிவு செய்தவர் அண்ணல்.

2.0. அவர் காலத்தில் பிறந்து அவரின் விடுதலை வேள்வியில் குறிப்பாக மதுரை மீனாட்சி அம்மன் கோவில் (1939) ஆலயப் பிரவேசத்தில் பங்கு பெற்ற திரு.வைத்தியநாத அய்யருடன் உடன் சென்றவர் ஆலவாய் க்ஷேத்ராமிருதகவி பிரம்மஸ்ரீ ஏ.ஆர்.சுப்பைய்யர் ஆவார். (அவரது 2வது மகன் மதுரை, வழக்கறிஞர், மீனாட்சி சுந்தரம் அவர்களின் கூற்று. (14.07.2016)

2.1. திருநெல்வேலி மாவட்டம் ஆழ்வார்குறிச்சி என்ற வைணவத் திருத்தலத்தில் திரு.ஏ.கே.ராமையர், விசாலாட்சித் தம்பதியரின் இரண்டாவது மகனே சுப்பையர். இவரது பிறப்பு 22.01.1903 என்பதாகும். சுப்பையர் அவ்வூரிலுள்ள திண்ணைப் பள்ளிக் கூடத்தில் நான்காம் வகுப்பு வரை படித்தார். குடும்பத்தில் நிலவிய வறுமையின் காரணத்தால் கல்வி கற்க இயலாது பிழைப்புத் தேடித் தமது பத்தாவது வயதில் மதுரைக்கு வந்தார். சோழவந்தான் கிராமத்தில் 'சாப்பாட்டுக் கடையில்' மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் சம்பளத்தில் கடையில் பணிக்குச் சேர்ந்தார். பின்பு மதுரைக்கு வந்து அதே போன்ற சாப்பாட்டுக் கடையில் பணிக்குச் சேர்ந்து அயராத வேலை, கடின உழைப்பு, தொழில் நுட்பம் ஆகியவற்றைத் தன் அனுபவக் கல்வியால் கற்றுத் தேர்ந்தார். எனவே 1923-ல் சொந்தமாகத் தொழில் துவங்கினார்.

2.2 அன்னாரின் தணியாத தமிழ் ஆர்வம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சங்கமிப்பு அவருக்குத் தமிழ் வித்வான்களின் நட்பினையும் உறவினையும் உணர்வையும் பெற்றுத் தந்தது. அத் தமிழ்க் கூடல் இணைப்பில் இருந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்,

*வித்வான் நாராயண அய்யங்கார், *நல்ல சிவன் பிள்ளை *திரு.கிருஷ்ணசாமி நாயுடு, *வழக்கறிஞர் என்.கிருஷ்ணசாமி அய்யங்கார், *கவிராஜ பண்டிதர் ஜெகவீர பாண்டியனார், *திருமுருக கிருபானந்த வாரியார், *ரசிகமணி சிதம்பரநாத முதலியார் என்போர் ஆவர். 'சுயமாகத் தன்னுடைய தமிழை வளர்த்துப் பல கவிகள், இலக்கிய நூல்கள், வெண்பாக்கள் ஆகியவைகளை இயற்றினார்' என்று திருமுருகன் எம்பாவை திருப்பள்ளியெழுச்சி (பக்.6) என்ற நூலின் வழி அறியலாம்.

2.3 இந்நூலாசிரியர் கந்தரலங்காரக் கலித்துறை, மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய தரிசன முறை, ஸ்ரீசுப்பிரமணிய தோத்திர மாலை, பரந்தாம முருக பஜனாம்ருத பக்திரசக் கீர்த்தனைகள், ஸ்ரீகந்த லீலாமிருத பஜனோஸ்தவ கீர்த்தனைகள், திருமுருகன் எம்பாவை, திருச்செந்தூர் ஆறுமுகன் திருப்பள்ளி எழுச்சி, திருப்பல்லாண்டு ஆகிய நூல்களைப் படைத்தவர். சித்திரக் கவிவெண்பா என்பதில் ரதபந்தன வெண்பா, கமலபந்தன வெண்பா போன்ற பாக்களைப் பாடுவதில் வல்லுநராக விளங்கியுள்ளார். இவர் தமது 57வது வயதில் (1960) திருமுருகன் திருவடி அடைந்தார்.

3.0 இத்தகு கவித்துவப் படைப்பிலக்கியக் கர்த்தாவுக்கு விடுதலைப் போராட்ட காலத்தில் வாழும் பெரும் பேறு கிடைத்தமையால் அண்ணல் குறித்து தமது மகன் கேட்டவுடன் ஒரு வெண்பாப் பாடியுள்ளார் என்ற குறிப்புடன் ஒரு பாடல் உள்ளது. அவரது பாடல்களை, இலக்கியப் பதிவுகளை அன்னாரது இரண்டாவது மகன் வழக்கறிஞர் மீனாட்சி சுந்தரம் துணைவியார் சாந்தா ஆகிய இருவரும் போற்றிப் பாதுகாத்து உள்ளனர். காலத்தின் வேகத்தில் சில சிதைவுபட்டாலும் எஞ்சியனவற்றிலிருந்து அண்ணல் குறித்துக் கிடைத்த இரு பாடல்களே இவண் விளக்கத்திற்கு உரியனவாகின்றன.

4.0 ஆசிரியர் குமாரர் காந்தி மகான் மீது பாடவேண்டும் எனக் கேட்டவுடனே கூறிய வெண்பா.(23.04.43)

"இந்தியா மேன்மையுற இங்கவதா ரஞ்செய்த
காந்தி மகான் கட்டளைச் சிந்தித்து-கண்டுளத்தில்
சத்தியத்தின் தூய்மையால் தாய்நாடு கைக்கொண்டு
நித்தியமாய் வாழ்வீர் நிலைத்து" என்று பாடியுள்ளார்.

4.1 சுப்பைய்யர் காந்தி மகானை 'அவதார' புருஷராகக் கண்டுள்ளார். 'அவதார்' என்ற சொல்லுக்கு மேலிருந்து கீழே இறங்கி வருதல் என்பதாகும். இத்தகு சொல்லாட்சி குறிப்பிட்ட 'ஒரிருவருக்கு' மட்டுமே கூறப்பெறுவது ஆகும். இவண் இத்தகு சொல்லாட்சியைக் குறிப்பிட்டதன் மூலம் சுப்பைய்யரின் கருத்தியல் புலமும் தெளிவும் புலனாகின்றன.

*காந்தி மகானின் 'கருத்து' என்பதிலும் 'கட்டளை' எனக் குறிப்பிட்டு அம் மகானின் மகத்துவ வழியில் செல்லல் வேண்டும் என்பதை எடுத்துரைக்கிறார்.

*காந்திமகான் சத்தியம் தான் நம்மை அந்நெறியில் பயணித்துத் தாய்நாட்டைக் 'கைக்கொண்டு' 'நித்தியமாய்', என்றென்றும் நிலைத்த வாழ்வினைப் பெற்று வாழ்ந்திடலாம் என்று மகாகவியின் வழியில் விடுதலை பெறுவதற்கு முன்னரே 'ஆடுவோம் பள்ளுப் பாடுவோம்' என்று ஆனந்த சுதந்தரத்தை முழக்கியத்தைப் போன்று 1943–ல் சுப்பைய்யர் 'தாய்நாடு' கைக்கொண்டு நித்தியமாய் நிலைத்து வாழ்ந்திடலாம் என்று இந்திய நாட்டின் வளமிகு வாழ்வுக்கு வாழ்த்துக் கூறியுள்ள பாங்கு அன்னாரது எதிர்காலவியல் கணிப்பை உணர்த்தும் உன்னத வரிகளாகும்.

5.0 ஆசிரியரின் மற்றொரு பாடல் குதம்பைச் சித்தர் பாட்டு மெட்டில் அமைந்தது ஆகும். சுப்பைய்யரின் திருமுருகன் திருஎம்பாவை, திருப்பள்ளி எழுச்சி, திருப்பல்லாண்டு, பக்திரசக்கீர்த்தனம் ஆகிய

பாடல்கள் அனைத்துமே இராகம், தாளத்துடன் குறிப்பிடப் பெற்றுப் பாடப்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. வெள்ளையரின் ஆதிக்க ஆட்சியால் எத்தகு அவலநிலை இந்திய நாட்டிற்கு ஏற்பட்டுள்ளது என்பதைக் கூறும் ஆசிரியர் 'புதல்வா' என்று கண்ணிதோறும் பயன்படுத்திக் குறிப்பிட்டுள்ளார். இப்புதல்வர்கள் இந்தியத் தாயின் விடுதலைக்காகத் தவிக்கும் புதல்வர்கள் எனக் கருதும் வகையில் பாடியுள்ளார் என்று விளக்கம் கூறுதற்கு இயலும்!

5.1 அப்பாடல் வரிகளாவன,

"சுயராஜ்யம் இல்லை ஸுகானுபவமில்லை
அயல்நாட்டு வெள்ளையரால்-புதல்வா"

என்று தொடங்கி, நாட்டில் நிலவும் ஒவ்வொரு அவல நிலையினையும் பட்டியலிட்டுள்ளார். அவையாவன:

*தாய்பாஷை இல்லை *கோயில் குளமில்லை
*குணமிகுந்தோரில்லை *தானம், தவம் இல்லை
*நேமநிஷ்டையில்லை *நித்ய கர்மமில்லை
*வேத ஸாஸ்தரம், புராணம் இல்லை
*நம்நாடு நமக்கில்லை *ராஜாதிகாரமில்லை
*ராணுவ பலமில்லை *உத்யோகமில்லை
*உயர்பதவி இல்லை *பீரங்கி இல்லை
*பெரிய கப்பல் இல்லை *வாணிபம் இல்லை
*விவசாயம் சரியில்லை *விலைவாசி குணமில்லை
*கைத்தொழில் இல்லை *மெய்த்தொழில் இல்லை

என்பனவாகும். எனவே,

"பாரத நாட்டினைப் பாழாக்கின வெள்ளைப்
பாதகரை இனிமேல் - புதல்வா
வீரமுடனே நாம் வேகமாய் ஒன்று சேர்ந்து
வேரோடனுப்ப வேணும் - புதல்வா
காந்தி மகான் சொன்ன - கட்டளை தன்னை
யேந்தி நடக்க வேணும் - புதல்வா
கைராட்டினம் சுற்றிட - கதரா லலங்கரித்து
வைராக்கியமுடனே - புதல்வா
சுயராஜ்ய சூர்யனை சுதினமதில் பார்ப்போம்
சுப்ரமணியன் சொல்லால் - புதல்வா"

என்று முத்தாய்ப்பாக நிறைவு செய்கிறார்.

5.2 "இந்தியநாடு வெள்ளையரால் எவற்றை எல்லாம் இழந்து நிற்கிறது என்று நிரல்படுத்தி எடுத்துரைத்துள்ள ஆசிரியர், வெள்ளையரைப் பல்வேறு அடைமொழிகளால் எடுத்துரைத்துள்ளார். சான்றாக,

*பாவி வெள்ளையர் *ஈன வெள்ளையர்

*சாதக வெள்ளையர் *வீரவெள்ளையர்

*தவநாச வெள்ளையர் என்பனவற்றைக் கூறலாம்.

5.3 *ஆசிரியர் காந்திமகானின் கட்டளையை பெயரை மனத்தில் பதிவு செய்து கொண்டு செயல்பட்டால் சத்திய நித்திய விடுதலை வாழ்வினை அடைந்திடலாம் என்று உறுதியாக அறுதியாகப் பாடியுள்ளார்.

*பாடலின் தொடக்கத்தில்

'சுயராஜ்யம் இல்லை...

என்று பாடியவர், பாடலின் இறுதியில்,

'சுயராஜ்ய சூரியனை சுதினமதில் பார்ப்போம்'

என்று கூறும் சுப்பைய்யர் 'திருமுருகனின்' தீவிரப் பக்தர். எனவேதான்,

'சுப்ரமணியன் சொல்லால்.....' என்று பாடி நிறைவு செய்கிறார்.

*அவனருளால்தான் அவன் தாள் வணங்குதலும், வாழ்தலும் வாய்க்கப்பெறும் என்பதை மிக நுட்பமாகக் குறிப்பிட்டுள்ளார் என்றால் ஏற்புடைத்து.

6.0 காலந்தோறும் படைப்பிற்கான கருவும், படைப்பாளியும் தோன்றிய வண்ணம் உள்ளனர். இதில் படைத்தலுக்காகக் 'கருஉயிர்ப்பாக' ஏறத்தாழ 150 ஆண்டுகட்கு மேலாகவும் உலகளாவிய திறத்தில் பேசப்பெறும், எழுதப்பெறும், விமர்சிக்கப்பெறும் உயர்வு–தாழ்வு இருநிலைகளிலும் ஆய்வு செய்யப் பெறும் அண்ணல் காந்தியடிகள் அரசியல், சமய, சமுதாய, அறிவியல், அறவியல் மனிதர். அவரது வாழ்வியல் நிகழ்வுகளில் ஏதேனும் ஒரு கூறினால் கவரப்பட்டு *வாழ்ந்தவர்கள்–வாழ்கின்றவர் பலர்.* இப்பலரில் ஒருவர் ஆலவாய் க்ஷேத்ராமிருதகவி பிரம்மஸ்ரீ சுப்பைய்யர் ஆவார். அன்னாரது வாழ்வும் வளமும் காந்தியப் பற்றும் என்றென்றும் நினைவு கூரத்தக்கது.

வாடையா? தென்றலா?

உலகச் செவ்விலக்கியங்களை ஒப்புநோக்கி ஆய்ந்தால் சங்க இலக்கியத்தின் உலகச் சிறப்புகள் புலனாகும். அவற்றுள் இன்றியமையாதன இரண்டு; ஒன்று மானிடத்தின் மாண்பினைக் காக்க, ஏற்றத்தாழ்வின்றி மனிதநேயம் பேணவும், மாந்தர் அனைவரும் கேளிர் எனவும் ஒரே குரலில் புலவர் அனைவரும் போற்றிய உலக ஒருமைப்பாட்டுணர்ச்சி; அடுத்தது எத்தகைய இயற்கை இகந்த நிகழ்ச்சிகளையும் கூறாமல் மனித ஆற்றலே அனைத்தினும் மேம்பட்டது அனைவருமே கொண்ட நடப்பியல் நெறி. சங்க காலத்தில் சமயமோ அல்லது சமயத்தின் தோற்றுவாயாக விளங்கிய கருத்துருவோ எதனையும் காண இயலாது எனப் பெருமையுடன் கூறலாம்.அதே நேரத்தில் வழிபாடு இல்லவே இல்லை என்று கூறமுடியாது. தொல்காப்பியர் கருப்பொருளைப் பற்றிய விளக்கமளிக்கும் போது முதலாவதாகத் 'தெய்வம்' என்று தான் தொடங்குகிறார். அதற்குப் பின்தான் 'உணா, மா, மரம், புள், பறை என்று பட்டியலை விரிக்கிறார். ஐங்குறுநூறு, வேட்கைப்பத்து, என்பதனை முதல் பத்தாக வைத்துள்ளது. பேராற்றலை முன்னிலைப்படுத்தி, நன்மை வேண்டித் தமது விருப்பத்தைக் கூறும் முறை உலகெங்கும் உள்ளது என்பதனைக் காட்டுதற்கு ஒரு சான்றாகத் தான் சப்பானிய சிண்டோ வழிபாட்டைக் கூறினேன். பழங்குடிகளிடம் காணப்படும் இந்த 'வேட்கை கிளத்தல்' சங்கத்தமிழரிடம் ஒரு நயத்தக்க முறையில் காணப்படுவதாக ஐங்குறுநூறு காட்டுகிறது. இதனைத் தான் சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தேன். இஃது எவ்வாறு 'பக்தியின் வாடை' ஆகும் எனத் தெரியவில்லை. ('பக்தி' அல்லது பற்று என்னும் இறையன்பு நெறிகூடச் சங்கம் மருவிய காலத்தில் தமிழகத்தில் தான் தோன்றியது. இஃது முழுமையும் தமிழனுக்கே உரியது. எனவே இதனை 'வாடை' என விலக்காமல் தென்றல் எனக் கருதுக. தனிநாயக அடிகளார் தமிழைப் பக்திக்கு உரிய மொழியாகக் குறிப்பிட்டமை சாலவும் பொருந்தும். எனினும் இதனை விளக்க முற்படுதல் இங்கே பொருந்தாது.)

தங்கள் அன்புள்ள,

மறைமலை இலக்குவனார்.

இதழாசிரியர் ஐய வினா?

தொல்காப்பியர் கருப்பொருளை விவரிக்கும் போது 'தெய்வம், உணா, மா, மரம், புள், பறை' எனக் குறிப்பிடுகிறார். அதற்கு உரை விளக்கம் அளிக்கின்ற இளம்பூரண அடிகள், "தெய்வம் முதலாகச் சொல்லப்பட்டனவும், அத்தன்மைய பிறவும் கருப்பொருள் என்று கூறுப. அவையாவன முதற் பொருட்கண் தோன்றும் பொருள்கள்" என எழுதுகிறார். எனவே தொல்காப்பியர், இளம்பூரண அடிகள் கூற்றின் வழி, அவையாவன என்றதனால் அஃறிணை என்பதும், தோன்றும் பொருள்கள் என்றதனால் அழியும் தன்மையன என்பதும் பெறப்படுகிறது. தொல்காப்பியர் காலத்தில் பேசப்பட்ட மாயோன், முருகன், இந்திரன், வருணன் போன்ற தெய்வங்களில் இந்திரன் கதி என்னவாயிற்று? தொல்காப்பியர் காலத்தில் பேசப்பட்ட தெய்வங்களின் உள்ளீடு என்ன? பிற்காலத்தில் பக்தி இயக்கம் புராண இதிகாசக்கதைகளை மையப்படுத்தி வளர்ந்து எடுத்த மதச் சடங்குகள் தொல்காப்பியர் இலக்கிய நெறிக்கு ஏற்புடையதா? வாடை என்பதை மணம் என்ற பொருளில் பயன்படுத்தினேன். மறைமலையின் பார்வையில் பக்தி தென்றல். ஆம், பொதிகைமலைப் பிறந்த தமிழ் வழியாகப் பக்தி தென்றலாயிற்று.

திருமூலர் நெறி

பேரறிஞர் சுப. அண்ணாமலை

(1996-ம் ஆண்டு நவம்பர் மாத செந்தமிழ் இதழில் வெளிவந்தது)

(1) நுழை வாயில்

சாதிகளும் சமயங்களும் மலிந்துள்ள நமது நாட்டில், இவற்றைத் தாண்டிச் சிந்திக்க வல்லவர்களும் இருந்திருக்கின்றார்கள். அளவாற் சிறிய தமிழகமே மூன்று பிரிவுகளாய், சேர, சோழ, பாண்டிய மண்டலங்களாய் இருந்தது எத்தனையோ காலம். மிகப் பழைய சங்க காலத்திலேயே இப்பிரிவுகள் இருந்தன. அக்காலத்திலேயே "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பாடினார் கணியன் பூங்குன்றனார். உலகம் அளாவிய மக்களினம் முழுவதும் இக்குலத்தில் பிறந்த உறவினரே என்பது இப்பொன்மொழியின் பொருள்.

விரிந்தகன்ற நெஞ்சத்தில் உருவாகி ஒளி வீசும் இந்த மனிதப் பற்றை, ஆன்மீகத்தில் முதல் முதலில் வெளிப்படுத்திய சான்றோர் ஒருவர் உண்டு. அவரே திருமூலர். அவர் இயற்றிய நூல் 'திருமந்திரம்'. இச்சொல் தெய்வத் தன்மையுடைய மந்திரம் எனப் பொருள்படும். இத்தகைய மந்திரத்தைப் பற்றிய நூல் ஆதலால், இப்பெயர் பெற்றது.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்பது திருமூலரின் மணிமொழி. இது கணியன் பூங்குன்றனாரின் மொழிக்கு இணையான புகழ் உடையது. ஆன்மீகத்தில், அம்மொழியில் இல்லாத புதுப்பொருள், இந்த வாசகத்தில் இருக்கின்றது.

உலகில் எத்தனை தெய்வங்கள் இருந்தாலும், அவை எல்லாம் ஒரே பரம்பொருளின் வேறு வேறு தோற்றங்களே, என்பது தான் அந்தப் புதுப் பொருள். திருமூலர் காலத்தில் புதிய பொருள் அது. ஆயினும், இந்தக் காலத்தில் கூடத் தெளிவாகப் புரிந்து கொள்ளப்படவில்லை என்பது தான் விந்தை.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்னும் மொழியில் தெய்வங்களின் ஒருமைப்பாட்டைக் கொண்டே, எண்ணற்ற மக்கட்குலத்தின் ஒருமைப்பாட்டையும் சகோதர உறவையும், பிற உயிரினங்கள் கூட இந்த உடல்பிறப்பு உரிமை உடையவை என்பதையும் நிலைநாட்டுகின்றார் திருமூலர்.

'பரம் பொருள் ஒருவனே', அவன் படைத்ததே இந்த உலகம். படைத்ததோடு விட்டுவிடாமல், ஒவ்வொரு சீவனிலும் (உடலும் உயிரும் இணைந்தது சீவன்) அவன் இருக்கின்றான். அவ்வாறு இருக்க மக்களுள் வேறுபாடு ஏன்? நடத்தப்படும் முறையில் மக்களுக்கும், மற்ற உயிரினங்களுக்கும் வேறுபாடு ஏன்? என்று வினவுவது போலப் பாடல் எழுதுகின்றார் திருமூலர். "ஒன்றே குலமும்" என்று தமது கொள்கையைக் கூறி, அதற்குக் காரணம் காட்டுவார் போல் "ஒருவனே தேவனும்" என்று அடுத்துக் கூறுகின்றார். இந்தக் காரண காரிய வாதத்தில் உட்பட்ட கருத்தை, மற்றொரு பாடலில் எடுத்துக்காட்டோடு சொல்கின்றார்.

"மண் ஒன்று தான் பல நற்கலம் ஆயிடும்" என்று, எடுத்துக் காட்டினை முன் வைக்கின்றார். அடுத்து "உள் நின்ற யோனிகள் எல்லாம் ஒருவனே" என்று, செய்தியை எடுத்துவைக்கின்றார். இதனை, "யோனிகள் எல்லாம் உள் நின்ற (வன்) ஒருவனே" என்று மாற்றிக் கொள்ள வேண்டும். யோனி பிறப்பு. பிறக்கும் உயிர்வகை.

இப் பாடலை "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்னும் மொழியோடு இணைத்துச் சிந்தித்தால், அம் மொழியில் உள்ள காரணகாரியம் தெளிவாகப் புரியும்.

திருமூலரின் காலத்தில் சைவ நெறி, பரம்பொருள் தத்துவம் உடைய பெருநெறியாக உருவாகிவிட்டது. அதற்கு, அவரது திருமந்திரமே காலத்தால் முதற் சான்று பகர்கின்றது. சைவநெறிக்குத் 'திருநெறி' என்று பெயர் சூட்டியவரும் திருமூலரே.

சைவத்தைப் போல் வைணமும் தனி நெறியாக உருவாகிவிட்டமையை மணிமேகலைக் காப்பியம் தெளிவாகக் காட்டுகின்றது. இந்த இரண்டு நெறியாளர்களுக்கு இடையே, அக்காலத்திலேயே வாதமும் பூசலும் இருந்திருக்க வேண்டும். அதைப் பற்றித் திருமூலர், சிவனும், நாராயணனும், பிரம்மனும் வேறு வேறு என்கின்றார்கள். இவர்களுக்குள் உயர்வு தாழ்வு சொல்கின்றார்கள். தம்முள் மாறுபட்டுச் சண்டை இடுகின்றார்கள். என்னே இவர்களது அறியாமை. இத்தெய்வங்களின் உருவமும் தொழிலும் வேறு வேறு தாம்; ஆயினும், இவர்களுள் இருக்கும் பரம்பொருள்—அதாவது, இவர்களாக நின்று செயல்படும் பரம்பொருள் ஒன்றே அன்றோ, என்ற பொருளில்,

"ஆதிப் பிரானும் அணி மணிவண்ணனும்
ஆதிக் கமலத்தலர் மிசையானும்
சோதிக்கில், மூன்றும் தொடர்ச்சியில் ஒன்று எனார்
பேதித்து உலகம் பிணங்குகின் றார்களே"

எனப்பாடுகின்றார். (தொடர்ச்சியின், தொடர்ச்சி காரணமாக. தொடர்ச்சி, படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்கள் தொடர்ந்து நடத்தல். அவற்றைத் தொடர்ந்து நடத்துபவன் பரம்பொருள். அவன் ஒருவனே. ஆகவே, மூவரும் ஒருவரே).

'சிவனோ, நாராயணனோ, அல்லாவோ, பரமபிதாவோ—இந்தப் பெயர் வேறுபாடு, மற்ற வெளி வேறுபாடுகளைப் பாராதீர். எல்லாச் சமயமும் நல்லனவே. பரம்பொருள், அவை எல்லாம் கூறுகின்ற தன்மையிலும் இருக்கின்றான். அவற்றைக் கடந்தும் இருக்கின்றான். ஆகவே, "உன் சமயம் தாழ்ந்தது; என் சமயம் உயர்ந்தது" என்று சண்டை இடாதீர். இந்தச் சமய விவாதம் ஓர் அடர்ந்த, புதர் நிறைந்த காடு. இந்தக் காட்டுக்கு அப்பால், பரம்பொருளைத் தேடுக என்று அறிவுரை கூறுகிறார் ஒரு பாடலில். அஃது இது,

"ஆன சமயம் அது இது நன்று எனும்
மாய மனிதர் மயக்கம் அது ஒழி
கானம் கடந்த கடவுளை நாடுமின்
ஊனம் கடந்த உரு அதுவாமே"

(மயக்கத்தை ஒழிக்கும் கடவுள், கானம் கடந்த கடவுள், எனத் தனித்தனிக் கூட்டுக. கானம், காடு, ஊனம்–ஊன் உருவம், கடந்த – அவ்வுருவம் போன்ற உருவம் இல்லாத. தெய்வங்கள் மனித உருவம் உடையவை. அவற்றைக் கடந்த பரம்பொருள் எவ்வுருவமும் இல்லாதது. ஆனால் என்றும் இருப்பது).

மற்றொரு பாடலில், 'உலகில் நூற்றுக் கணக்கில் சமயங்கள் உள்ளன. அவை கூறும் நெறிகளை எல்லாம் தாண்டிப் பரம்பொருள் இருக்க அதைத் தெரிந்து கொண்டால்தான் வீடுபேறு என்று கூறுகின்றார்.

"நூறு சமயம் உளவாம் நுவலுங்கால்
ஆறு சமயம் அவ் ஆறும் படுவன;
கூறு சமயங்கள் கொண்ட நெறி நில்லா
வீறு பரநெறி; இல் ஆம் நெறியன்றே?"

என்பது அப்பாடல் (ஆறும் படுவன–நூறு சமயமும் ஆறு சமயங்களில் அடங்கும். நெறி நில்லா வீறு – நெறிகளில் முடிந்துவிடாத தனித்தன்மை. இது பரம்பொருளுக்கு உண்டு. இல், வீடு; முத்தி.)

இன்று எங்கு பார்த்தாலும் சமயத்தின் பேரால், இனங்களின் பேரால் மக்கள் சண்டையிட்டுச் சகோதரர்களின் இரத்தம் ஆறாக ஓட, அதில் களிப்பேறி, வெறிகொண்டு அலையும் உலகிற்குத் திருமூலர் கூறும் அறிவுரை இது.

அவரது நெறியை, அவர்க்குப் பின்னே வந்த பொதுநெறிச் சான்றோர்களின் அறிவைப் பின்பற்றாததால், இன்றைய உலகம், ஆற்றின் நடுவே நின்று கொண்டு, நீர்வேட்கையால் துன்புறுவோனைப் போல், ஆயிரமாயிரம் அறிவியல் முன்னேற்றத்திற்கு நடுவே, காட்டு மிராண்டியாகக் கொண்டு செல்லும் அவலநிலை ஏற்பட்டிருக்கிறது. இனியாவது அன்புக்கும் பண்புக்கும் மதிப்புக் கொடுத்து, மானிட மதிப்பை உணர்ந்து திருந்துமா?

பரம்பொருளைத் தேடும் நெறியையே திருமூலர் திருமந்திரம் முழுவதிலும் கூறுகின்றார். "தேட வல்லார்க்கு அருள் தேவர் பிரான்" என்று அவனைக் கூறும் அவர், தமது திருமந்திர நூலில் வகுத்துக் கூறும் நெறியால், இதனைக் கற்போரை எல்லாம் 'தேடவல்லார்' (Knowledgeable inquisitors) ஆக்குகின்றார். அவர் கூறும் நெறி உலகியலுக்கு அப்பாற்பட்டது அன்று; வேறானதும் அன்று. அஃது ஒரு பழம் என்றால், அந்தப் பழமாகக் கனியவிருக்கும் காய் உலகியல் தான். திருமூலர் உலகியலை–மக்கள் வாழ்க்கைப் பண்பை இணைத்தே ஆன்மீக நெறியை வகுக்கின்றார்.

அவரது சொந்த ஆன்மீக வாழ்க்கை சாதாரணமான சூழ்நிலையில் ஒரு புது மலர்ச்சி பெற்றது. சாத்தனூர் என்னும் இடத்தில், அவ்வூர்க்கு வெளியே,

பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்த ஒரு கோவலன் (பசுப்புரவலன்) மூலன் என்னும் பெயர் உடையவன் திடுமென இறந்தான். அவனைச் சூழ்ந்து நின்ற பசுக்களின் துயர முகம் கண்ட ஒரு யோகியார் அன்பு மிகுந்து, தமது யோக வலிமையால், இறந்த மூலனுடைய உடம்பிற்குள் புகுந்தார். மூலனேயானார். தமது உடம்பை ஒரு மரப் பொந்தில் மறைத்தார். பசுக்கள் எல்லாம் மகிழ்ச்சிப் பெருக்கால், தம்மை மோந்தும், உரசியும், தடவியும் காட்டிய அன்பால் நெகிழ்ந்தார். அவை காட்டிய அன்பால், இறைவனின் அருளை உணர்ந்தார். பசுக்களை ஊரில் சேர்த்ததும், மூலனின் மனைவிக்கும் ஊரார்க்கும் தாம் யார் என்ற உண்மையைக் கூறினார்.

பிறகு மரப்பொந்தில் தமது உடம்பைத் தேடினார். அதைக் காணவில்லை. இறைவனது அருளை உணர்வதற்காக, அவனே அளித்த வாய்ப்பே நடந்து விட்ட நிகழ்ச்சி என்றும், இனிமேலும் மூலனின் உடம்பிலேயே வாழ்ந்து தாம் அருள்வழியில் பரம்பொருளைத் தேட வேண்டும் என்றும் உணர்ந்தார். இதனைப் பின்வரும் அவர் பாடற் பகுதிகளால் அறியலாம்.

"புகல் இடத்து என் மெய்யைப்போத விட்டானை"

"நந்தி அருளாலே மூலனைநாடிப்பின்
நந்தி அருளால் மெய்ஞ்ஞானத்து நண்ணினேன்".

"வேதத்தில் ஒத்த உடலையும் உள் நின்ற உற்பத்தி
அத்தன் எனக்கு இங்கு அருளால் அளித்ததே"

பின்பு, அண்மையில் உள்ள திருவாவடுதுறையில் யோகம் இருந்து, அன்பையே அருளாக, சிவமாக வளர்த்துக் கொண்டார். அருளாலும், சிவத்தாலும் தாம் பெற்ற இன்பத்தை, "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று உலகிற்கு வழங்கினார். அதுவே திருமந்திரம். அவர் வாழ்க்கை அனுபவமே திருமந்திரம் ஆகியது. பரம்பொருளை அவர் எந்நெறியில் தேடினார்?

ஒரு பெயர் தாங்கி, ஓர் உருவத்தில் மட்டுமோ அல்லது காற்று, சுவை, ஆற்றல் முதலியவை போல அருவத்தில் மட்டுமோ உள்ளதன்று பரம்பொருள் என்ற உண்மை,

"இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமானனாய் எறியும் காற்றுமாகி
அருநிலைய திங்களாய், ஞாயிறு ஆகி
ஆகாசமாய் அட்ட மூர்த்தி ஆகி"

என அப்பரடிகள் கூறுவதுபோல, எங்கும் பரவி, "வியாபகமாய்", இருப்பது அது. நீருள்ளே இருக்கிறான் என்று, அதை அறிவியல் முறையில் கூறிட்டுப் பார்த்தால் இருபங்கு நீரக வாய்வும், ஒரு பங்கு உயிரக வாய்வும்தாம் இருக்கும். பரம்பொருள் எங்கே? நீரில் சுவையாக இருக்கிறான் என்று பெரியோர் கூறுவதும் உபசாரமே. ஏன் என்றால், சுவையும் மாயையின் 36 தத்துவங்களுள் ஒன்று தான். நீர், நிலம், காற்று முதலியவற்றில் அணுக்கூட்டம் உண்டு. அவற்றைச் செய்பவன் பரம்பொருள் என்று கூறலாம். இது, அவனை நேர்முகமாக உணர்ந்து கூறுவதாகாது.

பரம்பொருளை நேர்முகமாக உணர்தல் எவ்வாறு?

அவன் எங்கும் வியாபகமாக உள்ளான் என்றால், நமது சீவனிலும் அதாவது உடம்பிலும், உள்ளத்தின் உணர்விலும் இருக்கின்றான்தானே.

"உள்ளத்து ஒருவனை உள்உறு சோதியை
உள்ளம்விட்டு, ஓரடி நீங்கா ஒருவனை"

என்கிறார் திருமூலர். பரம்பொருள் யாரோ அல்லன். நம் உள்ளத்து உணர்வு நமக்குச் சொந்தமல்லவோ? அவை நாமேயல்லவோ? அது போலப் 'பரம்பொருள் நமக்கு இனிய உறவு' ஒரு வகையில், நாமே தான்— இங்கு பொருள் உடையது முதல் தொடர்.

பின் ஏன் அவன் நமக்குப் புலப்படவில்லை? இதற்கு விடை கூறுகிறது வருகின்ற தொடர்; அவன் நம் உணர்வினுள் மறைந்திருக்கின்றானாம். சும்மா விருக்கின்றானா? இல்லையாம். அறிவுக்கு வடிவமாக நமது அறிவு அறிவூட்டும் அறிவு ஆற்றலாக இருக்கின்றானாம். (சோதி—அறிவு) அவன் நமக்குப் புலப்பட்டால், அந்தப் புலப்பாடு ஒரு பெரு விளக்காக—சோதியாகத் தெரியும். அதற்குப் பிறகு என்ன என்று கூறுகிறது அடுத்த தொடர். அவ்வாறு அவன் புலப்பட்டுவிட்டால், அவனை ஒரு கணங்கூடப் பிரிவது என்பது இல்லையாம். ஒரு காரணம் பற்றிப் பிரிந்தால், அதைவிடப் பெரிய துன்பம் இல்லை என்பது குறிப்பு. மணிவாசக அடிகள், திருப்பெருந்துறை ஆண்டவனைப் பிரிந்து,

"உடையான் அடிநாயேனைத்
தினையின் பாகமும் பிரிவது
திருக்குறிப்பு அன்று, மற்று அதனாலே,
முனைவன் பாதநன்மலர் பிரிந்து
இருந்து நான் முட்டிலேன் தலைக்கேன்"

எனக் கூறுவது காண்க.

நமது உள்ளத்தில் மட்டுமன்றி, உடம்பிலும் இறைவன் இருத்தலை மிக வலியுறுத்திக் கூறுபவர் திருமூலரே. அவர் யோகி, யோகத்தில், உணர்வாகிய ஆன்மீகத்தை வளர்க்கும் ஆற்றலே, உடம்பின் உள்ளே மறைந்திருக்கும் ஆற்றல் தான். அதற்குள்ளும் மறைந்திருக்கிறானாம் ஆண்டவன்.

"உடம்பினை முன்னம் அழுக்கு என்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறு பொருள் கண்டேன்"

என்று புரட்சிக்குரலை எழுப்பும் திருமூலர் இறைவனை 'உறு பொருள்' என்கின்றார். முன்பு அவனை உள்ளத்தின் ஆழத்திற் பார்த்தபோது, 'உறு சோதி' என்றவர் அவர். சோதி என்பது விளக்கம், அறிவு. இஃது இறைவனது சக்தி. பொருள் என்பது உண்மை. இஃது இறைவனே. இதனை விளக்குவது போல் புறப்படுகிறது அடுத்த அடி;

"உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று"

இத்தகைய கோயிலைப் பாதுகாக்க, வளர்க்க வேண்டாவா? இவ் உறுதியைச் சொல்கிறது இறுதி அடி;

"உடம்பினை, யான் இருந்து ஓம்புகின்றேனே"

'நானும் என்னவனைப் பிரியாமல் இருக்க வேண்டும். என் உடம்பையும் ஓம்ப வேண்டும்'—இது திருமூலரின் விருப்பம்.

உடம்பின் ஆற்றலைக் கொண்டு உயிராற்றலை (Life-force) வளர்த்து, அதனைக் கொண்டு உணர்வை வளப்படுத்தி, அதை 'உள்ளுதலில்' (தியானம்) நிறுத்தி, பல நாள் பயின்று, முடிவாக, உள்ளப்படும் பொருளோடு 'ஒன்றுதல்' யோகம்.

பதஞ்சலி முனிவரால் 'யோகசூத்திரம்' என்னும் நூலில் வகுக்கப் பெற்ற எட்டு—உறுப்பியோகத்தைத்' (அஷ்டாங்க யோகம்) திருமூலர் 'அங்கியோகமாக' —அந்த எட்டையுமே அங்கமாக உடைய ஒரு பெரிய யோகமாக—சிவயோகமாக வளர்த்தார். அங்கி, தீ; மூலக்கனல்; உயிராற்றல் எனவும் பொருள்படும்.

சிவயோகம் உணர்வை அன்பு நெறியில் செலுத்தி, அதற்குக் கருவியாக உயிரின் ஆற்றலை—அதில் மறைந்திருக்கும் குண்டலிசத்தி என்ற சத்தியை வழிபட்டுப் பயன்படுத்தி, பின்பு குண்டலி சத்தியே அருட்சத்தியாக மாறி நிற்க, அதனால் அருள்—அனுபவமும்; பிறகு சிவ—அனுபவமும் பெறுதலாகும். இது பரம்பொருளை நேரிற் காண்பதன்றோ?

இனித் திருமூலர் நெறியை அறநெறி, ஒன்றும் நெறி, சிவநெறி, தெளியும் நெறி என்ற நாற்பெரும் பிரிவுகளில் அமைந்த பன்னிரு கட்டுரை வாயிலாகத் தெரிந்து கொள்ள முற்படுவோம்.

தமிழ்ச்சங்கம்

மதுரையில் கடைச்சங்கம் இருந்தது. அதில் 49 புலவர்கள் இருந்து தமிழ் ஆராய்ந்தார்கள் என்ற வரலாறு அனைவரும் அறிந்ததே. மறுபடியும் அங்கே ஒரு தமிழ்ச்சங்கத்தை ஏற்படுத்திப் புலவர்களைக் கொண்டு தமிழைக் கற்பிக்க வேண்டும் என்று பாலவனத்தம் ஜமீன்தாராகிய பாண்டித்துரைத் தேவர் எண்ணினார். எப்போதும் தமிழ் சம்பந்தமான வேலைகளைச் செய்வதில் அவருக்கு ஆர்வம் அதிகம். 1901 மே மாதம் தொடங்கினார். அதற்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்ய வேண்டும் என்று உ.வே.சாவுக்குக் கடிதம் எழுதினார். கல்லூரி, நூல்நிலையம், செந்தமிழ் என்ற மாத இதழ் என்று மேலும் மேலும் தமிழ்ச்சங்கத்தைப் பற்றிப் பாண்டித்துரைத் தேவருக்கிருந்த ஆசைக்கு எல்லையே இல்லை.

சங்கச் செய்திகள்

3.10.16 அன்று ம.பொ.சி. மற்றும் செல்வக் கேசவராய முதலியார் ஆகியோரது நினைவேந்தல் முற்பகல் 10.30 மணியளவில் சங்க வளாகத்தில் நடைபெற்றது. பேராசிரியை ஜெ.கோகிலா அவரது உரையில் சாகித்திய அகாதெமி பரிசு பெற்றவர் ம.பொ.சி. என்றார். தமிழ் நெஞ்சங்களால் போற்றிப் புகழப்படும் ம.பொ.சிவஞானம் அவர்கள் நாட்டின் விடுதலைக்காகப்பாடுபட்டது குறித்தும் அவரது தியாகம் குறித்தும் பேசினார். மேலும் ம.பொ.சி அவர்கள் மேடைத்தமிழ் வளர்த்தது, இதழாசிரியராகத் திகழ்ந்தது. 140 நூல்களுக்கு மேல் படைத்தளித்த பேராற்றல் கொண்டவர் என அவரது பன்முகத் தன்மைகளை விளக்கினார். அடுத்ததாகத் திருமணம் செல்வக் கேசவராய முதலியாரின் பன்மொழிப் புலமை, கல்வி பணிகள், நூல் இயற்றியும் பதிப்பித்தும் ஆற்றிய தமிழ்ப்பணிகள் குறித்துத் துணைமுதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக ம.பொ.சி. மற்றும் செல்வக் கேசவராய முதலியாரின் திருஉருவப்படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

7.10.2016ஆம் நாள் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார், மு.வரதராசனார், வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் ஆகியோரின் நினைவேந்தல் முற்பகல் 10.30 மணியளவில் சங்க வளாகத்தில் நடைபெற்றது. பட்டுக்கோட்டைக் கவிஞர் கல்யாணசுந்தரனாரின் எளிய பதங்கள், எளியநடை, எளியகருத்து, எளியஇசை, கருத்தின் ஆழம், பாடுபடும் ஏழை எளிய மக்களின் வாழ்க்கையையும் உள்ளத்து உணர்வுகளையும் ஏக்கப் பெருமூச்சுகளையும் படம்பிடித்த பாடல்களைப் பேராசிரியை முனைவர். ச.மலர்விழி மாணவர்களுக்கு விளக்கினார். பேராசிரியர் பா.நேருஜி அவர்கள் மு.வ.குறித்துப் பேசும்போது தமிழறிஞர்களுள் முதன்முதலாக வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தினரால் சிறப்புமிக்க அறிஞராகப் போற்றிப் பட்டம் அளித்துப் பாராட்டப் பெற்ற நல்லறிஞர் பேராசிரியர் டாக்டர்.மு.வ.அவர்களே ஆவார் எனக் குறிப்பிட்டார். மேலும் மு.வ. அவர்களின் படைப்புக்களைக் கட்டுரைகள், பழைய இலக்கியங்களுக்குப் புதிய விளக்கம் அளித்த நூல்கள், கடிதங்கள், வாழ்க்கை வரலாற்று நூல்கள், நாடகங்கள், உரைவிளக்கம், சிறுகதைகள், இலக்கியத் திறனாய்வு நூல்கள் எனப் பல்வேறுவகைகளாகப் பகுத்து விளக்கினார். பேராசிரியர் மா.செல்வத்தரசி அவர்கள் வெள்ளகால் சுப்பிரமணியமுதலியார் தமிழிலக்கியத் துறைக்கு அளித்த பங்களிப்பு குறித்து உரையாற்றினார். அவர் தனது உரையில் மரபு வழிவந்த தமிழ்ப் பெருங்கவிஞரான வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தமிழோடு ஆங்கிலமும் கசடறக் கற்றுத் தேர்ந்த இருமொழிப் புலவர். மொழி பெயர்ப்பாளர், அறிவியல் நூல்களைத் தமிழில் பயிற்றுவிக்கமுடியும் என்பதை நிறுவிக் காட்டியவர் எனக் குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாகப் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார், மு.வரதராசனார் மற்றும் வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் ஆகியோரின் திருஉருவப் படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

14.10.2016 அன்று தமிழ் முக்கியமானவரான எழுத்தாளர்களில் சுந்தரராமசாமி அவர்களது நினைவேந்தல் முற்பகல் 10.30 மணியளவில் சங்க வளாகத்தில் நடைபெற்றது. பேராசிரியர் அ.நந்தினி அவர்கள் சுந்தரராமசாமி குறித்துப் பேசும் போது 'சிறுகதை, கவிதை, நாவல், இலக்கிய விமர்சனம், இதழியல், மொழி பெயர்ப்பு எனப் பலதளங்களில் 55 ஆண்டுகளுக்கும் மேலாகத் தீவிரமாக இயங்கியவர் சுந்தரராமசாமி. நவீனத் தமிழிலக்கியப் போக்குகளைத் தீர்மானித்தவர்களில் ஒருவராக மதிக்கப்படுபவர். வாழ்நாள் சாதனைக்கான இயல்விருதும், கதா சூடாமணிவிருதும் பெற்றவர்' என்று குறிப்பிட்டார். முன்னதாக சுந்தரராமசாமி அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப்பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

17.10.2016 ஆம் நாள் கவிஞர் கண்ணதாசன் அவர்களின் நினைவேந்தல் முற்பகல் 11 மணியளவில் சங்கவளாகத்தில் நடைபெற்றது. செய்யுளில் கவிதைகள் மற்றும் காவியங்கள், உரைநடையில் இலக்கியக் கட்டுரைகள், அரசியல் விமர்சனக் கட்டுரைகள் மற்றும் ஆன்மீகக் கட்டுரைகள், சிறுகதைகள் நெடுங்கதைகள், நாடகங்கள், திரைப்படக் கதைகள், வசனங்கள் மற்றும் பாடல்கள், பத்திரிக்கை ஆசிரியர் என எல்லாத் துறைகளிலும் மிளிர்ந்த கவியரசர் கண்ணதாசனின் பல்துறைவித்தகம் குறித்துப் பேராசிரியை முனைவர் பூ.பூங்கோதை விளக்கினார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாகக் கவிஞர் கண்ணதாசன் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

19.10.2016 அன்று மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தில் 'இலக்கிய இணையர்' பேராசிரியர்கள் முனைவர் இரா.மோகன்–முனைவர் நிர்மலா மோகன் அறக்கட்டளையின் சார்பில் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. முனைவர் இரா.மோகன் அவர்கள் அறக்கட்டளைச் சொற்பொழிவினைத் துவக்கிவைத்துத் தொடக்கவுரை நிகழ்த்தினார். காந்திகிராமியப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் பா.ஆனந்தகுமார் அவர்கள் "ஒப்பிலக்கியக் கோட்பாடுகள் – புதியபோக்குகள்" என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். ஒப்பிலக்கியத்தின் தோற்றம் மற்றும் தமிழில் ஒப்பிலக்கியத்தின் எதிர்காலம் மொழி பெயர்ப்பே என்றும் குறிப்பிட்டுத் தமது உரையை நிறைவு செய்தார். முதல்வர் முனைவர் சு.விஜயன் அவர்கள் வரவேற்புரை நல்கினார். துணைமுதல்வர் முனைவர்.கி.வேணுகா அவர்கள் நன்றியுரை ஆற்றினார். தமிழ்ச்சங்க பொதுக்குழு மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்கள், தமிழ் ஆர்வலர்கள், பேராசிரியர்கள், முனைவர்பட்ட இளநிலை ஆய்வாளர்கள், முதுகலை மாணவர்கள் உள்ளிட்டபலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

22.10.2016 ஆம் நாள் மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தில் 'குறுந்தொகையில் நயம்' என்ற தலைப்பில் இலக்கியச் சொற்பொழிவு நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் வழக்குரைஞர் திருமிகு.ச.மாரியப்பமுரளி அவர்கள் தலைமை தாங்கினார்.

'குறுந்தொகையில் நயம்' என்ற பொருண்மையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் முதுமுனைவர் இரா.இளங்குமரனார் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். அவர் தமது உரையில் 1915இல் திருக்கண்ணபுரம் சௌரிப்பெருமாள் அரங்கனார் குறுந்தொகையினை வெளியிடுவதற்கு நான்காம் தமிழ்ச்சங்கத்தில் இருந்த குறுந்தொகை ஏடு பயன்பட்டது. எல்லாச் சமயங்களையும் சமமாகப்பாவிப்பது இத்தமிழ்ச்சங்கம், உதாரணமாகப் புலவராற்றுப்படை, மதுரைத் தமிழ்ச் சங்கமான்மியம் எனப் பல்வேறு நூல்களைக் குறிப்பிடலாம். யாயும் ஞாயும் யாராகியரோ... செம்புலப்பெயல் நீர்போல அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே' என்று சொல்லியிருப்பதன் மூலம் சாதிவேறு பாடற்ற சமூகம் இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. கணவன் மனைவியைப் பாராட்டி மகிழ்தல் சிறந்த அறம் என்பதை 'முளிதயிர்பிசைந்த... நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே' என்ற பாடல் குறிப்பிடுகிறது என்றும், குறுந்தொகையின் நயம், வாழ்வியல் அறங்கள் போன்ற பல செய்திகளை விளக்கியும் உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் செந்தமிழ் கலைமற்றும் கீழ்திசைக் கல்லூரியின் செயலாளர் மாட்சிமை தங்கிய இராணி. லட்சுமிகுமரன் சேதுபதி அவர்கள், ஆட்சிக்குழு உறுப்பினர்கள், தமிழார்வலர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். முன்னதாகக் கல்லூரியின் முதல்வர் முனைவர் சு.விஜயன் வரவேற்றார். கல்லூரியின் பேராசிரியர் முனைவர் மா. செல்வத்தரசி நன்றி கூறினார்.

24.10.16 ஆம் நாள் பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் அவர்களின் நினைவேந்தல் முற்பகல் 11 மணியளவில் சங்கவளாகத்தில் நடைபெற்றது. பேராசிரியை ச.அங்கயற்கண்ணி தமது உரையில் 'கதிரேசன் செட்டியார் படிக்காத மேதை, புலமை நுணுக்கத்தால் பேராசிரியருக்கு ஒப்பாக மதிக்கப்பட்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியராகப் பணியாற்றினார். நூலாசிரியர், உரையாசிரியர், மற்றும் மொழிபெயர்ப்பாளர் ஆவார். மேலும் அவர் பண்டிதமணி, முதுபெரும்புலவர், மகாகோபாத்தியாயப் பட்டங்களைப் பெற்றவர். நகைச்சுவை உணர்வுமிக்கவர் என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப்பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர். முன்னதாகக் கதிரேசன் செட்டியார் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

சங்க ஆட்சிமன்றக் குழுக் கூட்டம்

நான்காம் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிமன்றக் குழு கூட்டம் 22.10.2016 அன்று காலை 10 மணியளவில் நடைபெற்றது. கூட்டத்திற்குச் சங்கத்தின் தலைவரும், மாட்சிமை தங்கிய முகவை மன்னருமான நா.குமரன் சேதுபதி அவர்கள் தலைமை வகித்தார். கூட்டத்தில் 1957–ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் தமிழகத்தின் ஒரே தமிழ்க் கல்லூரியும், தமிழ் உயராய்வு மையமுமான நமது செந்தமிழ் கலை மற்றும் கீழ்திசைக் கல்லூரிக்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திடமிருந்து தன்னாட்சி தகுதி பெற உரிய நடவடிக்கை எடுப்பதெனவும், நமது சங்கத்தின் சார்பாக தேவாரம், திருவாசகம் பயிற்சி வகுப்புகள் நடத்துவது எனவும் ஏகமனதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

டிசம்பர் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்



வள்ளல்
பொன்.பாண்டித்துரைத் தேவர்
(டிச 2 - 1911)

கவியரசு
முடியரசன்
(டிச 4 - 1998)

கல்கி
(டிச 5 - 1954)



நா.பார்த்தசாரதி
(டிச 13 - 1987)

டி.சி.ஸ்ரீநிவாஸையங்கார்
(டிச 9 - 1951)



நாவலர்
சோமசுந்தர பாரதியார்
(டிச 14 - 1959)

சு.செல்லப்பா
(டிச 18 - 1998)

கி.ஆ.பெ.விசுவநாதனார்
(டிச 19 - 1994)

பா.வே.மாணிக்க நாயக்கர்
(டிச 25 - 1931)

மன்னர்
பாஸ்கர சேதுபதி
(டிச 27 - 1903)



தமிழண்ணல்
(டிச 29 - 2015)

பதிப்பாசிரியர் : **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **முருகரத்தனம்**
முனைவர் திரு. **இராமசுந்தரம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **வெ.சுயம்பு**
முனைவர் திரு. **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 DECEMBER 2014 MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of Every Month

தமிழ்ச்சங்கத் தேர்வு அறிவிப்பு

மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தால் 50 ஆண்டுகளுக்கும் மேலாக வருடம் தோறும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புப் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு அரசுப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறவும் கூடுதல் மதிப்பெண்கள் பெறவும் வழிகாட்டியாகத் தமிழ் மொழித்தேர்வு தமிழ்ச்சங்கத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

இத்தேர்வில் கலந்து கொள்ளும் மாணவ / மாணவியர்களுக்குச் சங்கத்தால் சான்றிதழும் அதிக மதிப்பெண் பெறுபவர்களுக்குப் பரிசும் வழங்கப்பட்டு வருகிறது. இச்சான்றிதழ் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் பெரும்பயனுள்ளதாக இருக்கும். இந்த ஆண்டிற்கான சங்கத் தேர்வுகள் பன்னிரெண்டாம் வகுப்பிற்கு 9.01.2017 மற்றும் 10.01.2017 ஆகிய நாட்களிலும் பத்தாம் வகுப்பிற்கு 23.01.2017 மற்றும் 24.01.2017 ஆகிய நாட்களிலும் நடைபெறவுள்ளது. மாணவர்கள் அனைவரும் இத்தேர்வில் கலந்துகொண்டு பயன்பெற அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அனுப்புநர்,
செயலாளர்,
நான்காம் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை – 625 001. தமிழ்நாடு.

From
THE SECRETARY,
The Fourth Tamil Sangam,
54, Tamil Sangam Road,
Madurai - 625 001. Tamilnadu.

பெறுநர் / To,

Book Post

வெளியிடுபவர் : **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L., செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை – 625 001. 0452 – 2343707
பதிப்பாசிரியர் : **இரா.சதாசிவம்** 2/861, இராசராசன் தெரு,
மதுரை – 625 020. அலைபேசி : 94874 45403
அச்சிட்டோர் : **ஸ்ரீ பிரிண்டர்ஸ்** 147, கீழவெளி வீதி, மதுரை–1. அலைபேசி : 97894 95738